Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்


කණ්ණෝට්ටම් KANNOTTAM

மனிதநேயம் என்ற அடித்தளத்திலிருந்தே சுதந்திரத்திற்கான மாபெரும் இயக்கம் மேல் எழுகிறது. மனிதர்களை வெறுக்கும் காட்டுமிராண்டித்தனத் திலிருந்தல்ல.

வெளியீடு-31 | 15 ஜூன் 2006 | விலை:- 07.00

# வரலாறு மீண்டும் பதிவு செய்கிறது

## ஜூன்-19 தியாகிகள் தினம்



இத்தினத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி - பத்மநாபா தமிழ் சமூகத்தின் சுதந்திரத்திற்காகவும், ஜனநாயகம், மனித உரிமைக்காகவும், சகல சமூகங்களுடனும் சகோதரத்துவத்துக்காகவும், சர்வதேச நட்புறவுக்காகவும் மரணித்த தோழர்கள் போராட்டக்காரர்கள் பொதுமக்கள் அனைவரையும் நினைவு கூருகிறது. இவர்களுக்கு சிரந்தாழ்ந்து தனது இதய அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறது.

கடந்து வந்த கால்நூற்றாண்டில் சமூகத்தின் சகல தளங்களிலும் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்ற இலட்சிய கனவுகளுடன் போராடியவர்களின் அபிலாஷைகள் சரியானவை என்பதை வரலாறு நிரூபித்துக் கொண்டு வருகிறது.

1987 இல் இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை ஏற்று செயற்பட முற்பட்டது எத்தகைய தீர்க்கதரிசனமிக்க நடவடிக்கை என்பது இப்போது ஐயம் திரிபுற நிரூபிக்கப்பட்டுள்ளது.

புலிகளின் ஜனநாயக விரோத செயற்பாடுகள் தமிழ் மக்களையும் இலங்கையின் அனைத்து மக்களையும்,

02ம் பக்கத் தொடர்ச்சி

# தோழர் றொபேட் சுபத்திரன் மறைந்து மூன்று ஆண்டுகள்

இலங்கையில் ஒரு சமூக பொருளாதார அரசியல் மறுமலர்ச்சியை தனது இலட்சியமாக வரிந்து கொண்டவர் தோழர் றொபேட் சுபத்திரன்.

ஒரு உன்னதமான போராட்டக்காரர், எவ்வாறு வாழ வேண்டும் என்று தனது வாழ்வினூடாக நிரூபித்துச் சென்றவர் அவர். சமூகத்தின் பல்வேறு தளங்களில் அவர் செயற்பட்டுள்ளார். அரசியல், இலக்கியம், உடல் மன ஆரோக்கியம் என பல பரிமாணங்கள் இருந்தன. அவர் சிறப்பான தோற்றமும், நல்லியல்பும் கொண்ட மனிதராக காணப்பட்டார். தன்னுடைய சக தோழர்களை தான் இறுதிவரை கைவிடக் கூடாது என்ற உயரிய உள்ளுணர்வு அவரிடமிருந்தது.

தமிழ் மக்களின் தேசிய சுதந்திரத்துக்கானதும், சமூக மறுமலர்ச்சிக்குமானதுமான போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்ட தோழர் சுபத்திரன் ஜனநாயகத்தை எமது சமூகத்தில் நிறுவுவதற்கு தனது அயரா உழைப்பை அர்ப்பணிப்பை வழங்கினார். வேறுபட்ட கருததுக்களுடன் ஒன்றித்து வாழ்தல் என்பதில் அவர் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். அவருடன் பழகிய பல்வேறு தரப்பட்ட மனிதர்களே அதற்குச் சாட்சி.


1980 களின் நடுப்பகுதியில் அவர் சிறையில் இருந்தபோதும் சரி, வெளி உலகத்திலும் சரி மிகவும் அதிகமான நண்பர்களை கொண்டவராக நண்பர்களால் நேசிக்கப்படுபவராக காணப்பட்டார். மண் வாசனையுடனான வாய்மொழி வாக்கியங்களின் வளம் அவரிடமிருந்தது. நேர்மையாகவும், நீதியாகவும், ஒழிவுமறைவின்றியும், வாழ வேண்டும் என்பதை இடையறாது தனது நடைமுறைமூலம் புலப்படுத்திக் கொண்டிருந்தவர்.

வடக்கு கிழக்கில் மாற்று அரசியல் செயற்பாடுகள் முடக்கப்பட்டு அரசியல தலைவர்கள் போராட்டக்காரர்கள் படுகொலை செய்யப்பட்டு ஜனநாயக இடைவெளி அருகிக் காணப்பட்ட சூழ்நிலையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட யாழ் மாநகரசபையில் ஓர் அங்கத்தவராக ஜனநாயகத்திற்கான ஒரு சிறு ஒளிக்கீற்றை ஏற்படுத்த முனைந்தார். விவாதித்தல், கலந்துரையாடல், நட்புறவுடன் பிரச்சினைகளை கையாளுதல் போன்றவற்றில் தனது ஆற்றலை வெளிப்படுத்தினார்.

புலிகளால் படுகொலை செய்யப்பட்ட சரோஜினி யோகேஸ்வரன், சிவபாலன் போன்ற மாநகரசபை முதல்வர்களுடனும், ஜனநாயகத்துக்கு போராடி மறைந்த மாநகரசபை அங்கத்தவர்கள், ஊழியர்களுடனும் அவர் செயற்பட்டிருக்கிறார்.

தோழர் சுபத்திரனுக்கு பல பரிமாணங்கள் உண்டு. அவர் மனித உரிமைகளுக்காக போராடுபவராக, அரசியல் ஆயுதப் போராட்டக்காரராக ஒரு அரசியல் கைதியாக, மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனநாயக நிறுவனமொன்றின் அங்கத்தவராக என அவைபல. அவர் வளர்ந்துவரும் ஒரு தலைவராக எமது சமூகத்தில் காணப்பட்டார். யாழ் நூலகத்தை மறுநிர்மாணம் செய்வதில் மற்றவர்களுடன் சேர்ந்து தனது அர்ப்பணிப்பை வெளிப் படுத்தினார்.

எமது சமூகத்தில் தோழர் சுபத்திரன போன்ற தலைவர்கள் அரிதாகவே உருவாகினார்கள். இத்தகைய தகுதி வாய்ந்த மனிதர்களை உடல் மீதியின்றி அழித்ததன் மூலம் புலிகள் எத்தகைய மக்கள் விரோத சக்திகள் என்பதை உலகிற்கு உணர்த்தி நிற்கிறார்கள். கடந்த கால்நூற்றாண்டுகளாக இவ்வாறு எமது சமூகத்தில் உருவாகிய அத்தனை தலைசிறந்த மனிதர்களும் பிடுங்கியெறியப்பட்டார்கள்.



தோழர் சுபத்திரன் எத்தகைய அபிலாஷைகளை கொண்டிருந்தாரோ அதனை இன்று உலகம் உரைக்கத் தொடங்கியிருக்கிறது. ஜனநாயகத்தின் குரல் வலுவடைந்து வருகிறது. நியாயமான, நீதியான தீர்வொன்று இலங்கையின தமிழ் முஸ்லீம் ஏனைய சிறுபான்மை சமூகங்களுக்கு கிட்டச் செய்வதும் ஐக்கிய இலங்கைக்குள் [illegible] சமூகங்கள் ஐக்கியமாக வாழ்வதற்கான நிலைமைகளை ஏற்படுத்துவதும் ஜனநாயகம், மனித உரிமைகள், மிக உயர்ந்த பட்சத்தில் உறுதிப்படுத்தப்படுவதற்கும் எம்மை ஈடுபடுத்திக் கொள்வதே தோழர் சுபத்திரனுக்கு செய்யும் இதய அஞ்சலியாக இருக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்



## காட்டுமிராண்டி ராச்சியம்

மன்னார் வங்காலை தோமஸ்புரியில் இரவு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இளம் தாய் தந்தையர், குழந்தைகள் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டு குழந்தைகளும் தந்தையும் வீட்டின் கூரையில் தூக்கிலிடப்பட்ட கோரச்சம்பவம் நாகரீகமான மனிதர்களை பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியதாகும். இந்த நாடு மனிதர்களை இழந்து படிப்படியாக காட்டுமிராண்டிகளின் இராச்சியமாக மாறிவருகிறதா என்று எண்ணுமளவிற்கு நிலைமைகள் மோசமடைந்துள்ளன.

வங்காலையில் ஆறுமாதத்துக்கு முன்னர் தான் இந்தியாவில் இருந்து திரும்பி வந்து குடியேறிய மூர்த்தி மார்ட்டின், மேரி மார்ட்டின், அவர்களின் 6, 8 வயது குழந்தைகளான நிலுக்ஷன், லக்ஷிகா ஆகியோருக்கு நேர்ந்த கொடூரம் மனிதத்தை உலுக்கியுள்ளது. மூர்த்தி மார்ட்டின் தச்சுத் தொழில் செய்து வந்தவர் என அறியவருகிறது.

அவர் விடத்தல் தீவைச் சேர்ந்தவர் எனவும், இந்தியாவில் திருமணம் முடித்து மனைவியின் ஊரான வங்காலையில் குடியேறியவர் எனவும் அறியப்படுகிறது. அன்றிரவு தாங்கள் தூங்கப் போகும் போது தங்களின் இருப்பை மிகக் குரூரமாக இல்லாதொழிக்கும் கோர இரவாக அந்த இரவு இருக்கும் என்று அவர்கள் கனவிலும் நினைத்திருக்கமாட்டார்கள்.

இப்போதெல்லாம் குழந்தைகளையும், சிறுவர்களையும், தொழிலாளர்கள், பெண்களை படுகொலை செய்வதென்பது சர்வசாதாரணமான விடயங்களாகி வருகின்றன.

அல்லைப்பிட்டியில் தாய் தந்தையருக்கு நடுவில் உறங்கிக் கொண்டிருந்த குழந்தைகள் பெற்றோருடன் கொல்லப்பட்டனர். வங்காலையில் சிறுவர் சிறுமியர் கோரமாக படுகொலை செய்யப்பட்டு தூக்கில் தொங்கவிடப்பட்டனர்.

கால்வாய் திருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த 12 தொழிலாளர்கள் சில தினங்களுக்கு முன்னர் கடத்திச் செல்லப்பட்டு கோரமாக படுகொலை செய்யப்பட்டனர். அது சிறுவர்களுக்கான யுத்தப்பயிற்சி நடவடிக்கையின் ஓர் அங்கம் என அறியும் போதுதான் இரத்தம் உறைந்து போகிறது. அண்மைக்காலத்தில் இவ்வாறு கிராமவாசிகள், குழந்தைகள் படுகொலை செய்யப்படும் பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. வயல் வேலைக்குச் சென்று திரும்பிய விவசாயிகள் வெட்டிச்சாய்க்கப்பட்டார்கள்.

மூதூர் பகுதியில் 72 மணி ரேத்தில் ஊரை விட்டு வெளியேறவேண்டும் என் முஸ்லீம் மக்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

இத்தகைய காட்டுமிராண்டித்தனங்களில் ஈடுபடுவோர் நாகரீக உலகில் சுதந்திரமாக வாழ்வதற்கு எந்தத் தகுதியுமற்றவர்கள்.

படுகொலைகளின் மர்ம முடிச்சுக்கள் பாரபட்சமற்ற நீதி, விசாரணை என்ற வெளிச்சத்தில் அவிழ்க்கப்பட வேண்டும். எல்லா விடயங்களைவிட இது முக்கியமானது. ஏனெனில் நாங்கள் காட்டுமிராண்டிகளா அல்லது மனிதர்களா என்பதை திட்டவட்டமாக நிர்ணயிக்க வேண்டும். இந்த மாதிரியான படுகொலைகள் பத்தோடு பதினொன்றாக விட்டுச்செல்லப்பட முடியாது. அப்படி செல்வதானால் அந்த நாடு கடும் பிணிக்குள்ளானதென்றே அர்த்தப்படும்.

மன்னார் சம்பவம் பல கேள்விகளை எழுப்பியிருக்கிறது. தந்தையையும் பிள்ளைகளையும் வெட்டி தொங்கவிட்டவர்கள் தாயை இரத்த வெள்ளத்தில் நிலத்தில் வீழ்த்தியவர்கள் செய்தியொன்றை மறைமுகமாக விடுத்திருக்கிறார்கள். இந்த பயங்கரங்கள் உங்களுக்கும் நிகழலாம் என்பதே அது.

இந்த குடும்ப சங்காரத்தினூடாக பாரிய அச்சுறுத்தல் செய்தியொன்று சமூகத்திற்கு விடுக்கப்பட்டுள்ளது.

எமது சமூகத்தில் விஸ்தாரமான கொலை கலாச்சாரத்தை உருவாக்கியதில் தமிழ்ப் பாசிசமும் சிங்கள பேரினவாதமும் படுகுரூரமான பங்களிப்பை வழங்கியிருக்கின்றன. மனிதர்கள் கேள்விக்கிடமின்றி படுகொலை செய்யப்படும் போது ஏனைய எல்லா விடயங்களையும் விட இந்த காட்டுமிராண்டி நிலையை முடிவிற்குக் கொண்டுவருவதற்கே அனைத்து வழிகளிலும் முன்னுரிமை கொடுக்க வேண்டும். சகல போராட்டங்களும் மனிதர்களுக்கு சுபிட்சமான வாழ்வை உருவாக்கிக் கொடுப்பதற்கே. ஆனால் இங்கு மனிதர்களின் புதைகுழியின் மீது நாம் நின்று கொண்டிருக்கின்றோம். படுகொலைகளில் இவை சில உதாரணங்களே. தமிழ், முஸ்லீம், சிங்கள சமூகங்களைச் சேர்ந்த பிரஜைகள் குழந்தைகள், தொழிலாளர்கள், இளந்தலைமுறையினர், வயோதிபர்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி கொல்லப்படுவது சகிக்க முடியாதது.

சகல சமூக மக்களும் இன்று அமைதி இழந்து காணப்படுகின்றனர்.

இங்கு படுகொலைகள் உடனடியாக நிறுத்தப்படுவதற்கும், மனிதர்களின் உயிர், உடைமையை பாதுகாப்பதற்குமான நடவடிக்கைகள் அரசு, ஜனநாயக சக்திகள், சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள்- மிகத்தீவிரமான கரிசனை செலுத்த வேண்டும்.

# வரலாறு மீண்டும் பதிவு.....

நரகப்படுகுழிக்குள் தள்ளும் என்பதை முன் உணர்ந்து செயற்பட்டது தற்போது உலகளாவியளவில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

1986 இல் மாற்று அரசியல் இயக்கங்களை புலிகள் தடை செய்தார்கள். 20 ஆண்டுகளின் பின் தற்போது உலகம் அவர்களை தடை செய்துவிட்டது.

புலிகளின் ஜனநாயக விரோத சகிப்புத்தன்மையற்ற செயல்பாடுகளின உச்ச விளைவாகவே இது நிகழ்ந்துள்ளது.

நாங்கள் ஐக்கிய இலங்கைக்குள் நியாயமான தீர்விற்காக இற்றைக்கு 18 ஆண்டுகளுக்கு முன்னர் முயற்சிகளை மேற்கொண்டபோது அதனை அலட்சியம் செய்து, எள்ளி நகையாடி, காட்டிக்கொடுத்து அதிகாரப் பகிர்வு முன்னெடுப்பை கருவிலேயே சிதைத்தார்கள். அன்றைய பிரேமதாசா அரசும் புலிகளும் இந்த முயற்சியில் கூட்டமைத்துக் கொண்டார்கள்.

இன்று ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணபதற்கு சகல தரப்புக்களும் உடனடியாக செயல் நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என்று உலகம் சொல்கிறது.

புலிகள் கடந்த இரண்டு தசாப்தங்களாக தம்மை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு மாற்று கருத்தாளர்களை, மாற்று அரசியல் சக்திகளை உடல் மீதியின்றி அழித்தொழித்து வந்திருக்கிறார்கள். இன்று உலகம் சொல்கிறது புலிகள் தமிழ் மக்கள் ஏகபிரதிநிதிகள் இல்லை என்று.

நாம் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டதற்காக அதனை செயற்படுத்த முனைந்ததற்காக இந்தியாவின் மாபெரும் நட்பை நாங்கள் பெறுமதிவாய்ந்த விடயமாக கருதியதற்காக எம்மையும் எமது தோழர்களையும் துரோகிகள் என்றவர்கள் இன்று இந்தியா தலையிட வேண்டும் என்கிறார்கள்.

வரலாற்றில் நாங்கள் சரியான தீர்மானங்களை சரியான சந்தர்பங்களில் எடுத்திருககிறோம். அந்தத் தீர்மானஙகளுக்காக எமது தோழர்கள் தமது உயிரை அர்ப்பணித்திருக்கிறார்கள்.

கியூபாவின் தலைவர் 1950களின் இறுதிப்பகுதியில் நிகழ்ந்த புரட்சியின் போது பற்றிஸ்டாவின் இராணுவத்தால கைது செய்யப்பட்டு இராணுவ நீதிமனறத்தில் விசாரிக்கப்பட்டபோது வரலாறு என்னை விடுதலை செய்யும் என்றோ ஒருநாள் எமது தோழர்கள் புதைகுழியில் இருந்து சுமந்துவரப்படுவார்கள் என்று குறிப்பிட்டிருந்தார். எங்களை வரலாறு விடுதலை செய்துகொண்டிருக்கிறது.

தோழர்களே படுகொலை செய்யப்பட்ட எமது தோழர்கள் வரலாற்றின் கண்ணியமாக இடைவெளிகளில் வைககப்பட வேண்டும். ஏனெனில் அவர்கள் உயரிய இலட்சியங்களுக்காக போராடியவர்கள்.

தமிழர் இயககங்களிடையே ஐக்கியத்திற்காகவும், சிங்கள முற்போக்கு சக்திகளுடன் உறவை வலுப்படுத்துவதிலும், மலையகத்தின் மறுமலர்ச்சியிலும் இந்தியாவுடன் நட்பிலும், சர்வதேச விடுதலை ஸ்தாபனங்களுடன் கரம் கோர்ப்பதிலும் எமது தோழர் பத்மநாபா ஒரு வரலாற்றுப் பாத்திரத்தை ஆற்றியிருந்தார். அந்த வழியில் தான் எமது தோழர்கள் செயற்பட்டனர்.

01ம் பக்கத் தொடர்ச்சி

துரதிஸ்டவசமாக எமது சமூகத்தில் உருவாகிய உன்னத தலைவர்களை எல்லாம் குறிப்பாக தமிழ் பாசிசமும், சிங்கள மேலாதிக்கவாதமும் அழித்தொழித்து விட்டன. நாம் வெற்றிடத்தில இருந்து விடயங்களை ஆரம்பிக்க வேண்டும் என்ற அளவிற்கு மோசமான ஓர் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

தன்னம்பிக்கையுடனும், ஆளுமையுடனும் சமூகத்தினுள் புதிய தலைமுறை ஒன்று பீறிட்டு எழுவதற்கான நிலைமைகள் எல்லாம் நிர்மூலம் செய்து அப்பட்டமான ஈவிரக்கமற்ற பயங்கரவாதத்தை மாத்திரம் புலிகள் எமது சமூகத்தில் பிரதியீடு செய்துள்ளனர். அதனால் சமூகத்தின் சகல அரசியல், கலாச்சார பொருளாதார விழுமியங்களும் மனிதாபிமான ஜனநாயக விழுமியங்களும் அழித்தொழிக்கப்பட்டு ஒரு நடைபிண சமூக நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தோழ்களே தியாகிகளான எமது தோழர்கள் விட்டுச்சென்ற வளமான இலட்சியங்கள் எம்மிடம் இருக்கின்றன. துவண்டுபோய் கிடக்கும் எமது சமூகத்தில் மனித நாகரீகத்தை பறைசாற்றி நாம் மீளெழுவோம். அதிகாரம் ஒன்றை நிறுவுவதற்காக அல்ல. ஜனநாயகமான மனித வாழ்வொன்றை கட்டியெழுப்புவதற்கு.

நாம் இதனை தனியாக செய்துவிட முடியாது. அப்படி சிந்திப்பதும் ஜனநாயக விரோதமாகும். மற்றவர்களுடன் தோளோடு தோள் நின்று ஜனநாயக உணர்வுடன் ஐக்கியமாக நாம் எமது இலட்சியங்களை முன்னெடுக்க வேண்டும். இதுவே நாம் மறைந்த தோழர்களுக்கும் போராட்டகக்காரர்களுக்கும், பொது மக்களுக்கும் செய்யும் இதயபூர்வமான அஞ்சலியாக இருக்க முடியும்.

# தோழர் வானமாமலை மறைவு (28-05-2006)



தோழர் வானமாமலை மறைந்து விட்டார். இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்திலும் சோவியத் இந்திய நட்புறவுக்கழகத்திலும் மிக நீண்டகாலம அங்கத்துவம் வகித்த அவர் இந்தியாவின் தலைசிறந்த கிறிமினல் சட்ட வல்லுனராகத்திகழ்ந்தவர். அவர் மனித உரிமை விடயங்களில அதிகூடிய கரிசனை செலுத்தியவர் ஈழத் தமிழ்த் தேசிய இனப்பிரச்சனையில் மிகுந்த ஈடுபாடும் அக்கறையும் கொண்டிருந்தவர். சமாதான வழிகளில் ஈழத்மிழர்பிரச்சனைக்கு தீர்வுகாணவேண்டும் என்ற அக்கறை கொண்டிருந்தவர். தோழர் பத்மநாபாவுடன் நட்புறவுகொண்டிருந்தவர். அன்னாரின் மறைவிற்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி- பத்மநாபா தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி-பத்மநாபா**

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.**

**அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-**

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

E.P.I.C., Box No: 0362
71603 Ludwigsburg,
Germany.

B.M. Box No: 1738
London - Wcix - 3nn,
U.k.

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 222 2022,

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 22 25179


No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 22 27118

141A , மன்னார் ரோட்
குருமன்காடு,
வவுனியா.
☎ 024 22 23102

சென்செபஸ்த்தியார் வீதி
மன்னார்.
☎ 023 22 32822

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் பத்மநாபா மக்கள் நேசத்தை முன்னிறுத்தியவர்



தமிழகத்தின் தலைநகர் சென்னையில் 16 ஆண்டுகளுக்கு முன்பாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னிணியின் செயலாளர் நாயகம் தோழர் க.பத்மநாபா அவர்களுடன் 12 தோழர்களையும் தமிழக குடிமகன் ஒருவரையும், ஒரு மாலைக்கருக்கலில் கொலைகாரர்களின் துப்பாக்கிகள் காவுகொண்டன.

இந்த படுகொலைச் சம்பவமானது தமிழகத்தில் அதிர்ச்சியையும், அதிருப்தியையும் ஒருங்கே தோற்றுவித்திருந்தது. இந்தியாவின் உண்மையான நண்பனை இந்திய மண்ணிலேயே இந்தியாவின் விரோதிகள் கொன்றுவிட்டார்கள் என்று துக்கம் வெளியிடப்பட்டது. மத்திய மாநில அரசுகளினதும தமிழக மக்களினதும் அன்பையும் ஆதரவையும் பெற்றிருந்த ஈழத்தமிழர் போராட்டமானது அதன் உன்னதம் இழந்தது.

இந்த கொலைவெறியும், ஜனநாயக விரோத போக்கும் மனிதாபிமானம் அற்ற நடவடிக்கைகளும் தான் இன்று உலகமே புலிகளை பயங்கரவாதிகளாக அடையாளப் படுத்தக் காரணமாய் அமைந்திருக்கிறது.

ஈழத்தமிழர்களின் விடுதலையை நேசித்த ஈழத் தமிழ் மக்களின் சுபிட்சமான எதிர்காலத்தை கனவு கண்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் தோழர் பத்மநாபா, ரெலோ தலைவர் சிறிசபாரத்தினம், தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் அ. அமிர்தலிங்கம் போன்ற இன்னும் பல தமிழ் தலைவர்களையும் ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டிய இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியையும் நன்றி மறந்து படுகொலை புரிந்தாகள். ஆயுதப்போராட்டமானது கால் நூற்றாண்டை கடந்து விட்ட வேளையில் உலகின் ஆதரவை பெருக்குவதற்குப்பதிலாக தடை செய்துள்ள நாடுகளின் பட்டியலை பெருக்கியுள்ளார்கள்.

ஈழத்தமிழர்களின் போராட்டத்திற்கு ஆதரவு நல்கி ஒற்றுமைக்காகக் குரல கொடுத்து வந்த தமிழக தலைவர்களின் கருத்துக்கள் உதாசீனம் செய்யப்பட்டது. தமிழ் இயக்கங்களிடையே ஐக்கியம் தேவை என்பதை உணர்ந்தவர்களின் முன்முயற்சியால் உருவாக்கப்பட்ட ஈழ தேசிய விடுதலை முன்னணிக்குள் ஐக்கியம் என்ற பேரில் இணைந்துகொண்ட புலிகள் கூட இருந்தே குழிபறித்தார்கள். ஐக்கிய முன்னணியின் பிரதான பங்காளிகளாக இருந்த ரெலோ இயக்கத்தின் மீது தாக்குதல் தொடுத்து அந்த இயக்கத்தை சேர்ந்த பல உறுப்பினர்களை குரூரத்தனமாக கொன்றதுடன் அதன் தலைவர் சிறிசபாரத்தினத்தையும் கொன்றார்கள்.

இந்திய மத்திய அரசினதும், தமிழ நாடு மாநில அரசினதும், தமிழக மக்களதும் அனுசரணையையும், ஆதரவையும் உதவியையும் பெற்றுக் கொண்ட புலிகள் அவற்றை மறந்து இந்திய மக்களின் அன்பையும் மதிப்பையும் பெற்ற பாரதப்பிரதமர் ராஜிவ் காந்தி அவர்களை தமிழகத்தின் தலைநகரில் வைத்தே தற்கொலை குண்டுதாரியை ஏவி படுகொலை புரிந்தார்கள். இதனால் தமிழ்நாடு அரசுக்கும், தமிழக மக்களுக்கும் களங்கத்தை ஏற்படுத்தியதுடன் நன்றிமறந்தவர்கள் என ஈழத்தமிழர்களுக்கும் அபகீர்த்தியை உண்டுபண்ணினார்கள்.

ஈழவிடுதலைப் போராட்டத்திற்கு இருந்த ஆதரவு தளங்களை தமது பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் இல்லாமல் ஆக்கியதுடன் தமிழ் மக்களின் துன்பங்களில் அக்கறையும், அவர்களின் விடிவிற்கான போராட்டத்தில் உறுதியான ஈடுபாடும், சீரிய பார்வையையும் கொண்டிருந்த தோழர் பத்மநாபா போன்ற மக்களால் நேசிக்கப்பட்ட தலைவர்களை கொன்று தமிழ் இனத்திற்கே ஊறுவிளைவித்திருக்கிறார்கள். கால் நூற்றாண்டு கால ஆயுதப் போராட்டத்தின் மூலம் புலிகள் தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுத்த நன்மைகளை விடவும் இழைத்த தீங்குகள் அதிகமாகி வருகிறது.

முன்னரும், இப்போதும் தமிழக அரசு சுட்டிக்காட்டியது போன்று இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே ஈழத் தமிழர்களதும், இலங்கை மக்கள் அனைவரதும் விருப்பமாகும். தமிழ் மக்களதும், உலக தலைவர்களதும், தமிழக அரசினதும் கோரிக்கைகளை பொருட்படுத்தாமல் தொடர்ந்தும் புலிகள் வன்முறையிலும், ஜனநாயக விரோத நடவடிக்கைகளிலும் நம்பிக்கை கொண்டு, செயற்பட்டு வருகின்றனர்.

எமது செயலாளர் நாயகம் அமரர் தோழர் பத்மநாபா ஜனநாயகத்துக்காகவும், மனித உரிமைகளுக்காகவும், போராளி இயக்கங்களிடையே ஐக்கியத்திற்காகவும், இந்தியாவின் நட்புக்காகவும் கடுமையாகவும், தீர்க்கதரிசனத்தோடும் உழைத்தார் அவரது கருத்துக்களின் தீட்சண்யத்தை புரிந்துகொள்ளாத புலிகள் அவரை படுகொலை செய்தார்கள். அவரது கருத்துக்களை உதாசீனம் செய்ததன் விளைவை புலிகள் மாத்திரமல்ல தமிழ் மக்களும அனுபவிக்க நேர்ந்திருப்பது காலங்கடந்து உணரப்பட்டிருக்கிறது.

புலிகள் தமது நடவடிக்கைகள் மூலம் தமக்குத்தாமே தீங்கிழைத்தது மட்டுமல்லாமல் தமிழ் மக்களுக்கும் தொடர்ச்சியான அவலத்தையும், தீராத துன்பத்தையுமே தேடித்தந்திருக்கிறார்கள். பண்பாட்டு சீரழிவுகளையும், போலித்தனங்களையுமே வளர்த்துவிட்டிருக்கிறார்கள். மொத்தத்தில் அனைத்து இயக்கங்களினதும் மக்களினதும் உழைப்புக்களையும், தியாகங்களையும், தமது இயக்கத்தை சேர்ந்தவர்களின் உயிர்தியாகங்களையும் கூட வீணாக்கியிருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் கஷ்டங்கள் தொடர்பாக, அவர்களது இன்னல்கள் தொடர்பாக கெரில்லா அமைப்பான புலிகளைவிடவும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட இலங்கை அரசுக்கே பாரிய பொறுப்பு இருப்பதாக தோழர் பத்மநாபாவின் முன்னாள் தோழர்கள் சிலர் இப்போது தாம் எடுத்திருக்கும் தடம்புரண்ட நிலைப்பாட்டுக்கு ஏற்ப கருத்துக்களை கூறி வருகின்றனர்.

கெரில்லா போராட்டத்தின் பிதா என வர்ணிக்கப்படும் சேகுவேராவின் கருத்துக்கள் அத்தகையதில்லை. "புரட்சியாளர்கள் மக்களுடனான அன்பை இலட்சியமாக வரித்துக்கொள்ள வேண்டும்" "கடினமாக இருப்பினும் கூட நிஜமான புரட்சிக்காரன் அன்பினால வழிநடத்தப்படுகிறான்" என்பதே சேகுவேராவின் கருத்தாகும்.

அமரர் தோழர் பத்மநாபா அவர்களது கருத்துக்கள் இதுபோன்று மகத்துவம் மிக்கவை. "மக்களுக்காகவே மண்ணை நேசிக்கிறோம்" என்பது அவரது மேற்கோள்களில் ஒன்றாகும். வேறு எவரை விடவும் மக்களின் விடுதலைக்காக போராடுபவர்கள் அந்த மக்களின் துன்ப துயரங்களை போக்குவதில் பொறுப்பு மிக்கவர்களாக விளங்க வேண்டும் என்பதை அவர் தனது அடிப்படை கொள்கையாக கொண்டிருந்தார். மக்களின் சார்பாக நின்றே ஒவ்வொன்றையும் சிந்தித்தார். மனித நேயம் என்பதையே முதன்மைப்படுத்தினார்.

புலிகளின் படுகொலைகள் அழித்தொழிப்புக்கள் மத்தியில், செயலாளர் நாயகமான அமரர் தோழர் பத்மநாபா புலிகளால் படுகொலை செய்யப்பட்டு 16 ஆண்டுகளை கடந்துவிட்ட நிலையில் அவரது கொள்கை கோட்பாடுகளை உறுதியாகவும், நேர்மையோடும் பின்பற்றுபவர்கள் என்ற அடிப்படையில அவரை நினைவு கூருகிறோம் அவரது பெயரும் இலட்சியமும் நிலைக்க தொடர்ந்து உழைப்போம்.

தியாகிகள் தினமாக நாம் அனுஷ்டித்துவரும் எமது பாசமிகு தோழர் பத்மநாபா படுகொலை செய்யப்பட்ட தினமான ஜூன் 19 இல் இது வரை காலமும் தமிழ் மககளின் விடிவுக்கான போராட்டத்தில் தமது உயிரை அர்ப்பணித்த சக இயக்க போராளிகள், பொதுமக்கள் அனைவரையும் நினைவு கூர்ந்து மரியாதைப்படுத்துவதுடன் அனைவருக்கும் சிரம்தாழ்த்தி அஞ்சலி செய்வோம். •

# புலிகள் மீதான ஐரோப்பிய யூனியனின் தடை

ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் அதன் தலைமை புலிகளை பயங்கரவாத நிகழ்ச்சி நிரலில் இணைத்துக் கொள்கிறது.

29 மே 2006 அன்று புலிகளை பயங்கரவாத இயக்க பட்டியலில் ஐரோப்பிய நாடுகளின் ஒன்றியம் இணைத்துக் கொள்கிறது. அந்த பயங்கரவாதப பட்டியலில் உள்ள இயக்கத்தின் பெயரில் நபர்களோ, குழுக்களோ கீழ் குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளில் ஈடுபடுவது கீழ்கண்டவாறு தடை செய்யப்பட்டுள்ளது.

• பயங்கரவாத பட்டியலில் இணைக்கப்பட்டுள்ள அமைப்பின் நிதி, மற்றும ஏனைய பொருளாதார மூலவளங்கள் முடக்கப்படுகின்றன.

இந்த பயங்கரவாத அமைப்பிற்காக நிதி சேகரிப்பது பொருளாதார வளங்களை நேரில் உபயோகிப்பது நேரடியாகவோ, அன்றி மறைமுகமாகவோ செயற்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சட்டம் ஒழுங்கு துறையும் நீதித் துறையும் இணைந்து செயறபடும்.

• புலிகளை இந்த நிகழ்ச்சி நிரலில சேர்த்துக் கொள்வது பற்றி யாரும் ஆச்சரியப்படத் தேவையில்லை. புலிகளுக்கு பலதடவை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் புலிகள் திட்டமிட்டவகையில் இந்த எச்சரிக்கைகளை அலட்சியப்படுத்தி வந்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியம் கடந்த 27 செப்டம்பர் 2005 இல் புலிகளை பயங்கரவாதப் பட்டியலில் சேர்ப்பது பற்றி தீவிரமாக பரிசீலித்து வருவதாக அறிக்கை விடுத்திருந்தது. ஐரோப்பிய ஒன்றியம் சகல தரப்பினரையும் சமாதான நடவடிக்கைகளை நோக்கி தமது நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அதனடிப்படையில் ஒரு அரசியல் தீர்வை எட்டுவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்திருந்தது. தற்போதும் கூட புலிகள் வன்முறையை கைவிட்டு சமாதான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும் என்றும் வன்முறைகளுக்கு முடிவுகட்டி பேச்சுவார்த்தை மூலம் தீர்வை எட்ட முடியும் என்று எதிர்ப்பார்க்கிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் நடவடிக்கை புலிகளுக்கு எதிரானதே தவிர தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல.

• அதேவேளை இலங்கை [illegible] அரசு கட்டுப்பாட்டுப் பகுதி[illegible] முறையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். யுதத நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றியம் இதனைத் தெரிவிக்கிறது. ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசு ஜனாதிபதி அவர்களின் இதயபூர்வமான செயற்பாட்டுடன் சகல வன்முறைகளையும் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். என்று எதிர்பார்க்கிறது.

இலங்கையின் சகல பிரஜைகளுக்கும் இலங்கையின் சட்டஒழுங்குத்துறை பாதுகாப்பை வழங்குவதோடு அரசின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நிகழ்ந்த வனமுறைகள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படுவதோடு அதில் சம்பந்தப்பட்டவர்கள் தண்டனை பெறாமல் தப்புவதற்கான நிலைமைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

• வன்முறையில் புலிகள் மாத்திரம ஈடுபடவில்லை. அரசு கட்டுப்பாட்டுப் பாட்டுப் பகுதிகளில் அரசு வன்முறைகளை கட்டுப்படுத்தவேண்டும். இது தெளிவாக இலங்கையின் உறுதிப்பாடின்மைக்கு வழிவகுத்துள்ளன. சமா[illegible] •

# உதவி வழங்கும் நாடுகளின் சமாதானத்துக்கான அழுத்தம்

புலிகளும் இலங்கை அரசும் 2002 இல் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தந்தின்படி சமாதான தீர்வை எட்ட முயலாவிட்டால் தாங்கள் இதிலிருந்து விலகப் போவதாக டோக்கியோவில் கூடிய உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மனிதாபிமான உதவிகளை தவிர்ந்த மற்றைய உதவிகளை நிறுத்துவது பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள நிலவரம் தொடர்பாக அமைதி இழந்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இரு பகுதியினருக்கும் தாங்கள் இது பற்றி அறிவித்துள்ளதாகவும் டோக்கியோ மாநாட்டின் பின்னர் அவர்கள் தெரிவித்துள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

நாங்கள் 85 வீதமான உலகின் தேசிய வருமானமுள்ள நாடுகள் எமது நாட்டு மக்களுக்கும் நாங்கள் பொறுப்புள்ளவர்கள். சமாதான வழிகளில் தீர்வு காண்பதில் அதனை முன்னெடுத்துச் செல்வதில் அவர்களுக்கு அக்கறை இல்லையெனில் நாங்கள் அதிக காலம் இந்த விடயத்தில் செயற்பட முடியாது.

இராஜதந்திர வட்டாரங்கள் இதுபற்றி தெரிவிக்கையில் ஒஸ்லோவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு இரு பகுதியினரும் தமது கரிசனையை செலுத்த வேண்டும்.வார்த்தைகளுக்கு அப்பால் இது நிகழவேண்டும்.

தமது பாத்திரம் தொடர்பாக எந்த குழப்பமும் தமக்கு இல்லை எனவும் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நெதர்லாந்தின் தூதுவர் வான் டெஜிக் மனித உரிமைகள் நிலவரங்கள் தொடர்பாக யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு தெரிவித்தவை முக்கியமானவை என்றும் அவை தாக்கமானதாக பிரச்சன்னப்படுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியம் பேச்சுவார்த்தை மூலமான நிரந்தர தீர்வே சரியானதென நம்புகிறது. ஒஸ்லோவில் எட்டப்பட்ட தீமானங்கள் தொடர்பில் நடைமுறை சார்ந்த செயற்பாடுகள் அவசியம். இதில் இலங்கை மக்களின் நலன்களில் அக்கறையுள்ள அனைவரும் ஈடுபாட்டை காண்பிக்க வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றியம் இதயபூர்வமாக சகல கட்சிகளும் வன்முறைகளுக்கு முடிவு கட்டி பேச்சுவார்த்தை மூலம் கடந்த 20 வருடங்களாக நிலவும் பிரச்சினைக்கு தீர்வு காண முன்வருமாறு கேட்டுக் கொள்கிறது. •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய யூனியனின் பயங்கரவாத பட்டியலில் புலிகள் இடம் பிடித்தனர்

புலிகள் அதிகார பூர்வமாக ஐரோப்பிய யூனியனின் பயங்கரவாத இயக்கப்பட்டியலில் இடம்பெற்றுவிட்டனர்.

ஐரோப்பிய யூனியனில் அவர்களின செயற்பாடுகள் முடக்கப்படும். அவர்களின் சொதது்க்கள், வங்கிக்கணக்குகள ஆகியன முடக்கப்படும். பலாத்காரமாகவோ நயம்படப்பேசியோ புலிகளின் நடவடிக்கைகளுக்கு நிதி சேகரிக்க முடியாது. நேரடியாகவோ மறைமுகமாகவோ அலுவலகங்கள் வைத்து இயங்கமுடியாது. பிரச்சாரம் செய்ய முடியாது.

புலிகளின் மனித உரிமை மீறல்கள குறிப்பாக சர்வதேச பயங்கரவாத இயக்கங்களின தரத்தை விஞ்சிய அவர்களின் பயங்கரவாத செயற்பாடுகள், உலகளாவிய தமிழர்களை அச்சுறுத்தி கப்பம் வரி வசூல், குறிப்பாக சிறுவர் சிறுமியரை யுத்தத்திற்கு அணிதிரட்டுவது, தற்கொலை குண்டுத்தாக்குதல்கள் நாட்டை அழிவுப்பாதையில் இட்டுச செல்லும் அண்மைக்கால நாசகார வேலைகள், சமூகங்களிடையே பதட்டத்தை உருவாக்கும் வெட்டவெளிச் சமான முயறசிகள் என பல காரணிகள் இந்த தடைக்கு காரணிகளாக இருக்கின்றன.

புலிகளை தடைசெய்ய அண்மையில் அமெரிக்கா விடுத்த கோரிக்கையும் ஒரு முக்கிய காரணியாகத் தொழிற்பட்டிருகிறது. தடை என்பது எல்லாம் ஒருவழிப்பாதை தான். இது எல்லாம் தற்காலிகமானவை, நீக்கப்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை.

தம்மைத் தடைசெய்தால் நிலைமை பாரதூரமாக மாறும என்ற மிரட்டல்கள் எல்லாம் புலிகள் மீது மேலும் அழுத்தத்திற்கு வழிவகுக்கும்.

தற்போது உலகில் கணிசமான நாகரிகமான நாடுகளில் முன்னேற்றமடைந்த ஜனநாயக நாடுகளில் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டிருக்கிறது என்பது அவதானத்திற்குரிய விடயமாகும். எனவே நாகரிகம், முன்னேற்றம், மனித உரிமை ஜனநாயம் ஆகிய உயரிய விழுமியங்களுக்கும் புலிகளுக்குமிடையோன பொருத்தமின்மை, ஒவ்வாமையையே இத்தடை புலப்படுத்துகிறது. அவர்கள் பூமிப்பந்தின் எந்தப் பிரதேசத்தில் வேலைசெய்தாலும் கால ஓட்டத்தில் வேண்டாத விருந்தாளிகள் என்ற பெயரை தட்டிச் செல்வதில் அசகாய சூரர்கள். உண்மையில் மனித குலத்திற்கும் புலிகளுக்குமிடையே ஒவ்வாமை காணப்படுகிறது. மனித இயல்பும், புலிகளின் இயல்பும் நேர்விரோதமானவையாக காணப்படுகின்றன.

இந்தியா போன்ற மிகவும் சகிப்புத்தன்மை உள்ள ஜனநாயக பாரம்பரியம் கொண்ட நாட்டுடன் மிக அநாகரிமான முறையிலும் காட்டுமிராண்டி முறையிலும் தொழிற்பட்டு தடையை எதிர் நோக்கியவர்கள் உலகின் எந்த நாட்டிலும் அனுசரித்து வாழ முடியாதவர்கள் என்பதே நிஜ உண்மையாகும். எனவே உலக மனிதகுலத்தால் அங்கீகரிக்கப்படாத அபாயகரமான சத்தியாக கருதப்படும் ஒனறை தமிழ மக்கள தமது தலைமையாக அனுசரித்துப் போவது தமிழ்மக்கள் தங்களை தாங்களே நரகப்படுகுழியை நோக்கி இட்டுச செல்வதாகவே அமையும்.

புலிகளின் எந்த ஜனநாயக விரோத, மக்கள் விரோத நடவடிக்கைகள் அவர்களை நெருக்கடியான நிலைக்கு இட்டுச் சென்றதோ அதே நடவடிக்கைகளை அவர்கள் இன்னும் மோசமான வடிவங்களில் அதிகரிக்கிறார்கள்.

எனவே புலிகளின் இந்த பாதையில் மீட்சி கிடையாது தமிழ் மக்கள் திட்டவட்டமாக புலிகளின் பாதையிலிருந்து விலகிக்கொள்வதே அவர்களின் எதிர் காலத்திற்கு நன்மை பயக்கும்.

உதாரணமாக இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை உருவாக்கியதற்காக, வடக்கு-கிழக்கில் அதிகாரப்பகிர்வுக் கட்டமைப்பொன்றை உருவாக்குவதில உதவியதற்காக இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியை பிரபாகரனின் பாசிச நலன்களை முன்நிறுத்தி படுகொலை செய்தார்கள்.

அண்மையில் இலங்கையின் யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு யுத்த நிறுத்த ஒப்பந்த விதிகளுக்கிணங்க புலிகள் "போ்ள் குறுஸ்" கப்பலை இலக்கு வைத்து நடத்திய தாக்குதலை கண்டித்ததற்காக, அவர்கள் இலங்கை கடற்படைக் கப்பலில் கண்காணிப்புப் பணி செய்வதற்காக புலிகளால் பகிரங்கமாக அச்சுறுத்த பட்டார்கள். இனி மேல் அரசின் கடற் படை கப்பல்களில் கண்காணிப்பு பணி செய்யக்கூடாது என பகிரங்கமாக மிரட்டினார்கள்

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதாக சுதுமலையில் மக்கள் முன்பகிரங்கமாகத் தெரிவித்துவிட்டு பின்னர் இந்திய அமைதிகாப்பு படைக்கெதிராக யுத்தத்தை தொடங்கவில்லையா.

தற்போது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்துவிட்டு அந்த ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட விடயங்களில் அவர்கள் மீறாத விடயம் எதுவுமில்லை என்ற நிலையைத் தோற்றுவித்துள்ளார்கள்.

புலிகள் நம்பகரமான சத்திகள் அல்ல என்பதே இத்தகைய நடவடிக்கைளில் இருந்து நிருபணமாகிறது.

அவர்கள் தாம் சார்ந்த சமூகத்துக்கோ அல்லது அண்டை அயலாருக்கோ அல்லது சர்வதேச சமூகத்திற்கோ நம்பகரமானவர்கள் அல்ல என்பதே உண்மையாகும்.

சர்வதேச நாடுகளில் பெரும் நிதிச் செலவில் நடத்திய செயற்கையான ஆர்பாட்டங்கள் இனி ஓய்ந்து தேய்ந்த போவது தவிர்க்கமுடியாதது.

ஆனால் இலங்கையில் இனப்பிரச்சனை தீர்வுக்கான முன்னெடுப்புக்களும் மனித உரிமை வடயங்களும் பிரதான இடத்திற்கு வருகின்றன.

# தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் உறுதிப்படுத்தப் படவேண்டும்

புலிகளின் செயற்பாடுகள் ஐரோப்பாவில் முடக்குவதற்கான தீர்மானங்கள் ஐரோப்பிய யூனியனால் எடுக்கப் பட்டுவிட்டன. அரசும் புலிகளும் சமாதான வழிகளில் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண்பதற்கான முயற்சிகளை துரிதமாக முன்னெடுக்க வேண்டும் என்றும் வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வருவதுடன் சாதாரண மக்களின் உயிர், உடைமை பாதுகாப்பு, மனித உரிமைகளை உயாத்திப் பிடிப்பது பற்றியும் வலியுறுத்தியுள்ளன.

புலிகளை ஐரோப்பாவில் தடை செய்தது மிக முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கை. சமகால உலக மானிடம பயங்கரவாதத்தை சகித்துக் கொள்ளாது. பயங்கரவாத வழிமுறைகள் காலாவதியானவை என்பதை உணர்த்தி நிற்கிறது.

ஆனால் நிகழ்ச்சி நிரலில் மிக முக்கியமான விடயம் ஒன்று முன்னுக்கு வருகிறது. அது தான் தமிழர்களின 70ஆண்டுகாலப் பிரச்சனைக்கு என்ன தீர்வு என்பதே அது. கடந்த பல தசாப்தங்களாக தமிழ் மக்கள் ஏமாற்றத் திற்கும், ஓரவஞ்சகத்திற்கும், மோசடிக்கும், கட்டிக்கொடுப்பிற்கும் உட்படுத்தப்பட்டிருகிறார்கள். இந்த இனப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கான முயற்சிகளும் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுமே இன்று பிரதான விடயங்களாகும்.

இந்த விடயத்தில் இனிமேல் சொற்சிலம்பம் ஆடுவது சகிக்கமுடியாத விடயமாகவே இருக்கும் ஒற்றையாட்சி, சமஸ்டி, நிர்வாக பரவலாக்கல், இடைக்கால நிர்வாகம் என்ற வார்த்தை பிரயோகங்களுக்கப்பால் தமிழ் மக்களின் அரசியல் வாழ்வுரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமான நிர்ணயகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1987 இலஙகை- இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்கு-கிழக்கு இணைக்கப்பட்டிருகிறது. திருமலை தலைநகரமாக்கபட்டிருகிறது. அதிகாரப்பரவலாக்கல் பற்றிய கருத்தியல் பரிணாமத்தில் சமஸ்டி தீர்வு பற்றிய கருத்துருவும் வளர்ச்சியடைந்திருக்கிறது. இந்த விடயங்கள் செழுமைப்படுத்தப்பட்ட நிர்ணயகரமான தீர்வை நோக்கி இலங்கை முன்னேற வேண்டும். ஒஸ்லோ பிரகடனத்திலும் இந்த சமஸ்டி தீர்வு பிரதான அம்சமாக இடம் பெற்றிருகிறது.

கடந்த 30 வருடங்கிளில் இலங்கை சமூகங்கள் குறிப்பாக தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அழிவுகளை சந்தித்திருக்கிறார்கள். தமிழ் மக்களின் பிரச்சனை இனியும் சொற்சிலம்ப விளையாட்டுப் பொருளல்ல என்பது விளஙகிக் கொள்ளப்பட வேண்டும். தெற்கின் அரசியல் சக்திகள் தமிழ்மக்களின் பிரசசனைகளுக்கு தீவு காண ஆக்கபூர்வமான வழிகளில் இணைந்து செயற்படவேண்டும். அதே போல் முஸ்லீம் மக்களின் தனித்துவம் பாதுகாப்பு தொடர்பான கோரிக்கைளும் தீவிர அக்கறைக்குரியன.

புலிகள் தமிழ் மக்களின் உரிமைக்கான குரலை மிகப்பிரமாண்டமான அளவில் பலவீனப்படுத்தி அவ்விடத்தில் தமது பாசிச பயங்கரவாதத்தை பிரதியீடு செய்தார்கள். இல்லாவிடில் நாம் அண்டை அயலாரின் உதவியுடன இனப்பிரச்சனைக்கு 20ஆண்டுகளுக்கு முன்னரே தீர்வு கண்டிருக்க முடியும். ஆனால் இனியும் இதனை இழுபறிப்படச் செய்து பேரழிவுகளை அனுமதிக்க முடியாது.

புலிகள் இனிமேலும் ஆக்கபூர்வமாகச் செயற்படுவார்கள் என்பதற்கான எந்த ஆதார அறிகுறிகளும் புலப்படவில்லை. அவர்கள் தம்மை மேலும் மேலும் பயங்கரவாத வன்முறைகளினுள் தம்மைத்தாமே சிக்கவைத்துக் கொண்டே இருப்பார்கள். அப்போது அவர்கள் மேலும் மேலும் [illegible]டுவது தவிர்க்க முடியாததாகும். எனினும் சர்வதேச அளவில் எடுக்கப்படும் சமாதான முயற்சிகள் ஊக்குவிக்கப் பட வேண்டும. வன்முறையற்ற பாதை பலப்படுத்தப்படவேண்டும் என்ற கருத்திற்கு இரண்டாம் பேச்சுக்கே இடமில்லை.

ஜனநாயகம், மனித உரிமை, பல கட்சிகளின் செயறபாடு என்பன ஐரோப்பிய யூனியனின் அறிக்கையில் வலியுறுத்தபட்டுள்ளன.

கடந்த 30 வருடங்களில் 1977 இல் இருந்து தமிழ் மக்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இது ஒரு முடிவில்லாத அலைவு. இப்படி ஒரு சமுதாயம் அலைக்கழிந்து மரணங்களுடன வாழமுடியாது. இந்த விடயம் அன்றாட அரசியல் சித்து விளையாட்டுக்களில் ஈடுபட்டிருப்பவர்களின் பொழுது போக்கு அம்சமோ அல்லது பாசிச பயங்கரவாதிகளின் அதிகாரப்பிரச்சனையோ அல்ல. இது ஒரு சமூகத்தின் ஓலவலம்

வடக்கு- கிழக்கில் அபிவிருத்திப் பணிகள் என்பது தொல்பொருளியல் கூடங்களில் தான் தேடிப்பார்க்க வேண்டும். என்ற நிலை. சிலவாரங்களுக்கு முன்னர் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் பாலித கோகன்ன வடக்கு-கிழக்கிற்கும் தெற்கிற்கும் இடையே உள்ள அபிவிருத்தி விகிதாசார இடைவெளியைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

வடக்கு-கிழக்கின் கத்தோலிக்க திருச்சபையின் பங்கு குருவானவர்களும் அபிவிருத்தி பணிகள் மனித உரிமைகள் பற்றிய தமது அக்கறையை அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்து பிரஸ்தாபித்திருந்தனர். எனவே அரசியல் அதிகாரப்பகிர்வினூடான நிர்வாக கட்டமைப்பின் தேவை அதனை உருவாக்குவதற்கான துரிதமான பரந்து பட்ட செயற்பாடு கருத்து பரிமா [illegible] வேண்டும்.

# மக்களின் எதிர்பார்ப்பும் ஏமாற்றங்களும்

இலங்கையில் சமாதான ஒப்பந்தம ஏற்பட்டவுடன் இங்கு வசிக்கும் மூவின மக்களும் அடைந்த மகிழ்ச்சியினை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. குண்டு வெடிப்புக்களுக்கும், துப்பாக்கி ஓசைகளுக்கும், வீதிச் சோதனைகளுக்கும் மத்தியில் தமது வாழக்கையினை நடாத்தி வந்த அம் மக்களின் மகிழ்ச்சியில் நியாயம் இருந்தது.

சமாதானம் ஒப்பந்தம் ஏற்பட்டு மக்கள் மனதில் அதன் மீது நம்பிக்கை தோன்றி அவர்களது மனம் குறுகிய வட்டத்தினுள் இருந்து விரியத்தொடஙகியது.

அமைதி ஒப்பந்தம் ஏற்பட்ட சில வாரங்களில் மட்டக்களப்பு, கல்லடிபாலம், பாசிக்குடா கடற்கரை, திரிகோண மலை- கன்னியா, கதிர்காமம், யாழ்ப் பாணம், திருக்கேதீஸ்வரம், சுற்றுலாத் தலங்கள் எல்லாம் மீண்டும் களைகட்டத் தொடங்கியது. வர்த்தகம் சிறு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் வடக்கு, கிழக்கு, தெற்கு என பயணப்பட்டனர். மிக நீண்டகாலம் கடலுக்கு செலலாத மீனவர்கள் வாழவில் சாடைமாடையாக ஒளிக்கீற்று தென்பட்டது.

ஆனாலும் புலிகள் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நாளில் இருந்து தமது மூச்சும் செயலுமாகவிருந்த படுகொலைகளை விஸ்தாரமாக தொடர்ந்தனர். சிறுவர் சிறுமியரை யுத்தத்திற்கு பலாத்காரமாக அணிதிரட்டினர். முஸ்லீம் மக்கள் மீது இடையறாத அச்சுறுத்தலை அவர்களின் இருப்பின் மீது தொடர்ந்தனர். மாற்றுக் கருத்துக் கொண்ட அரசியல் தலைவர்களை போராட்டக்காரர்களை படுகொலை செய்துகொண்டிருந்தனர். இன்று அது எல்லைகடந்து சென்று விட்டது. காட்டாற்று வெள்ளம் போல் படுகொலைகள் நிகழ்கின்றன.

சமாதான ஒப்பந்தம் அமுலில் இருந்தபோதும்கூட புலிகள் தமது அத்தனை பஞ்சமா பாதகங்களையும் அரங்கேற்றிக்கொண்டுதான் இருந்தார்கள். மேலோட்டமாக இயல்பு நிலையொன்று தென்பட்டாலும் உள்ளே செல்லரித்துப் போயிருந்தது.

புலிகள் மக்களின் இயல்பு வாழ்க்கையை வெறுப்பவர்கள் என்பது மக்களுக்கு புரியாதவிடயமல்ல. ஆனால் மக்கள் காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டியநிலை. இந்த காலகட்டத்தில்தான் வடக்கு கிழக்கில் இருந்து கணிசமான மக்கள் கொழும்பிலும், மலையகத்திலும் சுற்றுபுறங்களிலும் மீண்டும் குடியேறத் தொடங்கினர்.

மக்களிடம் இயல்பாக இருந்த சமாதான சகவாழ்விற்கான ஆவல் தற்போது மீண்டும் கானல் நீராகிவிட்டது. கடந்த இரண்டு தசாப்தங்களில் இந்த கானல் நீரை பல சந்தர்ப்பங்களில் மக்கள் பார்த்து களைத்துவிட்டார்கள்.

இறுதியில் மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக 2004 டிசம்பர் 26ல் இலங்கையின் கரையோர மக்களின் வாழ்வை கடல் கொண்டது. 30,000 க்கு மேல் மரணித்தார்கள். எட்டு லட்சம் பேர் அந்தக் கணப்பொழுததில் அகதிகள் ஆனார்கள். அதில் சிங்களம், தமிழ், முஸ்லீம், பறங்கியர், மலேயர்கள் என்ற பேதமிருக்கவில்லை. இலங்கை மக்கள் அனைவரும் ஒன்றாக அழுதார்கள். ஒருவருக்கொருவர் துயரத்தை பகிர்ந்து கொண்டார்கள். உருக்கமான நிகழ்வுகள் அவை. இந்தக் கணப்பொழுதுகள் அதிகநேரம் நீடிக்கவில்லை

சமாதானம சகவாழ்வு கனவுகளுக்கு கண்ணிவெடிகள் மூலமும் கிளேமோர் மூலமும் வேட்டுவைத்துவிட்டார்கள். மீண்டும் மக்களை நிர்க்கதியாக்கத் தொ ங்கிவிட்டார்கள். மக்களின் ஆசை க ா நிராசையாக்கி விட்டார்கள். தமது ஏகஅதிகார இருப்புக்காக செய்த பழி பாவங்களையெல்லாம் மக்களுக்காகவே செய்வதாக மக்களை மடையர்கள் என நினைத்துக்கொண்டு கூக்குரலிடுகிறார்கள்.

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும சிதறுண்டு கிடக்கும் தமிழ் மக்கள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றார்கள். மீண்டும் போரா, மீண்டும் இறப்பா, காணமல் போதலா, மீண்டும் இடம்பெயர்வா, கதறி அழுதலா வேண்டாம். இது வேண்டாம். யாரிடம் சொல்வது. யாரைக் கேட்பது. உள்ளுக்குள் மனம புழுங்கியே வாழ்கின்றார்கள்.

புலிகளின் கொலை ஆட்கடத்தல், பிள்ளைகளை படையில் சேர்த்தல், பணம் பறித்தல் தொடர்கதையாகவுள்ளது. இவர்களின் அராஜகத்தினை முடிவுக்குக் கொண்டுவர மக்கள் சக்தியால் மட்டுமே முடியும். மக்கள் இவர்களுக்கெதிராக பேச வேண்டும். எழுத வேண்டும். மக்கள் அணிதிரள வேண்டும். போராட வேண்டும் இல்லையேல் தமிழர்கள் தலையெழுத்தை யாராலும் மாற்ற முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இறுதி யுத்தத்திற்கு" நிதியுதவி செய்தல்

## புலம் பெயர்ந்த தமிழர்களிடம் புலிகள் இயக்கத்தின் அச்சுறு த்தல்களும் பலாத்கார பணப்பறிப்பும்

எவ்வாறாயினும் இந்த நாடுகளில் தமிழ் சமூகத்திற்குள்ளே ஏற்பட்டுள்ள இந்த அச்ச நிலைமை காரணமாக, பொலிஸ் மற்றும் சட்டத்தை நிலை நிறுத்தும் பிரிவினிடம் ஒரு தனிப்பட்ட முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் மிகத் தெளிவாக பணப்பறிப் புக்கள். என்பவற்றிற்கு எதிராக பொலிஸ் விசாரணைகள், சட்ட நடவடிக்கை எடுத்தல், மற்றும் அவற்றை பொது மக்களுக்கு பகிரங்கப்படுத்தல் என்பன தொடர்பாக அரசாங்கமானது முன்கூட்டிய நடவடிக்கைகளை **(Proactive)** எடுத்தாக வேண்டும். அத்துடன் தனிநபர்கள் இவை தொடர்பாக முறைப்பாடுகளை செய்வதற்கு அவர்களுக்கிருக்கும் உரிமைகள் மற்றும் வழிமுறைகளையும் பகிரங்கபடுத்தல் வேண்டும்.

### செய்முறைமை

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது 2005 ஒக்டோபர் முதல் 2006 பெப்ரவரி மாதம் வரை இவ்வறிக்கையைத் தயாரிப்பதற்கான ஆய்வினை மேற்கொண்டது. ரொடன்டோ, கனடா, லண்டன், பிரிட்டன், ஜெனீவா, சுவிற்சலாந்து மற்றும் டசில்டோர்வ் ஜேர்மனி ஆகிய இடங்களில் வாழும் புலம் பெயர் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களிடம் தொலைபேசி மூலமாகவும் நேரடியாகவும் தகவல்களை அது பெற்றுக் கொண்டது. குறிப்பாக இத் தகவல் அறியும் நடவடிக்கையானது கனடா மற்றும் இங்கிலாந்தில் வாழும் தமிழ் சமூகத்தினரை மையமாக வைத்தே நடத்தப்பட்டிருப்பதுடன் இவ்விரு நாடுகளுமே உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களின் அரைவாசியை அண்மித்த தொகையினை கொண்டிருக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது, தமிழ் வர்த்தக உரிமையாளர்கள், உத்தியோகத்தர்கள், செயற்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும ஏனைய தனிநபர்களையும நேர்காணல் செய்தது. அனேகமான இந்த நேர்காணல்கள் ஆங்கிலத்திலும், ஏனையவை தமிழ் மொழி பெயர்புடனும் நடைபெற்றன.

இலண்டன் மாநகர பொலிஸ், டொரன்டோ, பொலிஸ், இலண்டனில் உள்ள வெளிநாடு மற்றும் பொதுநலவாய அமைப்பு பரிவு **(UK, Foreign and Commonwealth Office)** மற்றும் உலகத் தமிழர் இயக்கம். ஆகியவற்றின் பிரதிநிதிகள் இன்னும் தனிப்பட்ட நிபுணர்கள் ஆகியோருடனும் நாம் உரையாடினோம்.

2006ம் ஆண்டு பெப்ரவரி மாதம் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எழுந்த கேள்விகளை எழுத்து வடிவில், இலங்கையில் புலிகள் இயக்கத்திற்கு நாம் அனுப்பி வைத்திருந்த போதும், அது தொடர்பாக எந்தவிதமான பதிலுரைகளும் அவர்களிடமிருந்து எமக்குக் கிடைக்கவில்லை. 2006ம் ஆண்டு பெப்ரவரியில் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான கேள்விகள் பற்றி, பிரித்தானிய தமிழ் சங்கத்துடன் தொலைபேசி மூலமாகவும் நாம் தொடர்பு கொண்ட போதும் அதுபற்றி எவ்விதமான பதிலும் எமக்குக் கிடைக்கவில்லை.

இவ்வறிக்கைக்காக நேர்காணல் செய்யப்பட்ட தமிழர்களின் பாதுகாப்பிற்கு மிகவும் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தல்கள் இருப்பதன் காரணமாக அத் தனிநபர்களில் அநேகமானவர்களின் பெயர் விபரங்கள் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன. மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புடன் உரையாடியவர்களை இனங்காணுவதில் இருந்து பாதுகாப்பதற்காக இந்த உரையாடல்கள் நடைபெற்ற இடங்கள மற்றும் அவர்களை இனங்காணக்கூடிய ஏனைய விபரங்கள் மாற்றப்பட்டுள்ளன. அல்லது இங்கு அவை வெளியிடவில்லை.

சில சம்பவங்களோடு நேரடியாக தொடர்பு பட்டவர்களுக்கு ஆபத்துக்கள் ஏற்படாத வகையில், அச் சம்பவங்களை இங்கு விபரிக்க முடியாமல் இருந்ததன் காரணமாக, அச்சம்பவங்கள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்படுவதை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானத முற்று முழுதாக தவிர்த்திருக்கிறது.

### பரிந்துரைகள்

**கனடா,பிரித்தானியா உட்பட புலம் பெயர்ந்த தமிழர்கள அதிகமாக வாழும் ஏனைய நாட்டு அரசாங்கங்களுக்கு**

*புலிகள் இயக்கத்தோடு தொடர்புள்ள வனமறைகள், பலாத்கார பணப்பறிப்பு, அச்சுறுத்தல்கள் மற்றும் நெருக்குவாரங்களில் இருந்து தமிழ் குடியிருப்பாளர்களை பாதுகாப்பதற்காக காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் குறிப்பாக*

• தமிழ் சமூகத்திற்குள் நடைபெறும் பலாத்கார பணப்பறிப்பு மற்றும் நெருக்குவாரங்கள் என்பவை தொடர்பாக காத்திரமாக விசாரித்து அறிவதற்கு பொருத்தமான அமைப்புக்களை உள்ளடக்கியதாக, பொலீசாரின் தலைமையில் விசேட விசாரணை செயலணிகளை **(Special interagency task force)** நிறுவுவதோடு சட்ட ரீதியாக தண்டனை வழங்கவும் ஆவண செய்ய வேண்டும்.

• புலிகள் இயக்கத்தினால் அல்லது ஏனைய குழுக்களினால் மேற்கொள்ளப்படும் நிதி சேகரித்தல், அச்சுறுத்தலுக்கு உள்ளாகுதல் அல்லது நெருக்குவாரத்திற்கு உட்படுத்தல் என்பவற்றுக்கு முகங்கொடுக்கின்ற தனிநபர்களுக்கு, அவர்கள் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பவற்றை வளக்கதுகின்ற வகையில் அவை தொடர்பான சட்ட விடயங்களை தமிழ மக்களுக்கு பகிரங்கமாக உணர்த்தும் வகையிலான பிரச்சார நடவடிக்கைகளை தமிழ் பத்திரிகைகள், வானொலிகள் மற்றும் ஏனைய ஊடகங்களைப் பாவித்து மேற்கொள்ளல் வேண்டும்.

• பலாத்காரப் பணப்பறிப்பு மற்றும் அச்சுறுத்தல் என்பவை தொடர்பாக முறைப்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கு, தமிழ் பேசுகின்ற உத்தியோகத்தர்களைக் கொண்டு நியமிக்கப்பட்ட விசேடமான உடன் தொலைபேசி வசதிகளை **(Hotline)** செய்வதோடு அதன மூலம் கிடைக்கப்பெறும் தகவல்களை சட்டத்தை அமுல்படுத்தகின்ற உரிய திணைக்களத்திற்கு வழங்குதல் வேண்டும்.

• புலிகள் இயக்கம் தொடர்பானதாக நிகழும் அச்சுறுத்தல்கள் மற்றும் பலாத்காரப் பணப்பறிப்பு என்பவை என்னென்ன விதமாக நிகழ்த்தப்படுகின்றன என்பது பற்றி கலந்துரையாடுவதற்காக தமிழ் சமூகததின் தலைவர்களுடன் சந்திப்புக்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும். இவ்வாறான சந்திப்புக்களை பயன்படுத்தி, அரசாங்கமானது இவ் அத்துமீறல் நடவடிக்கைகள் தொடர்பாக எவ்வளவு ஆழமாக அக்கறைப் படுத்தப்படுகின்றது என்றும், தமிழ் சமூகத்தின் அங்கத்தவர்களை பாகாப்பதற்காக அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது என் பதையும் அம் மக்களுக்கு தெரியப்படுத்த முடியும்.

• புலிகள் இயக்கத்திற்காக சேர்க்கப்படும் நிதியானது மறைமுகமாக அவ் இயக்கத்தால் மேற்கொள்ளப்படும் சிறார்களை படையில் சேர்த்துக் கொள்வது உட்பட ஏனைய யுத்தக் குற்றச செயல்களுக்கு உதவலாம் என்பதைத தமிழ் சமூகத்தின் அங்கத்தவர்களுக்கு தெரியப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

• புலம் பெயர்ந்து வாழும் தமிழ் சமூகத்தின் அங்கத்தவர்கள் மீது நடத்தப்படும் சகலவிதமான வன்முறைகள், அச்சுறுத்தல்கள், நெருக்குவாரங்கள் மற்றும் இடைஞ்சல்களுக்கு உள்ளாக்குதல் என்பவற்றை புலிகள் இயக்கம நிறுத்த வேண்டும் என அவர்களை வலியுறுத்தல் வேண்டும்.

### புலிகள் இயக்கத்திற்கும் புலிகளுடன் தொடர்பான அமைப்புக்களுக்கும்

• மீண்டும் இலங்கைக்கு செல்லுகின்ற புலம் பெயர்ந்த தமிழ் சமூகத்தின் அங்கத்தவாகள் உட்பட ஏனைய தமிழ் சமூகத்தினரிடம் இருந்து நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ளும் வன்முறைகள் அச்சுறுத்தலகள், நெருக்குவாரங்கள் மற்றும் இடைஞ்சல்கள் ஏற்படுத்தல் என்பவற்றை உடனடியாக நிறுத்திக் கொள்ளல் வேண்டும்.

• புலிகளின் அங்கீகாரம் இன்றி தனித்துவமான சமூக நிகழ்வுகளை ஒழுங்கு செய்கின்றவர்கள், அல்லது புலிகள் இயக்கம் தொடர்பாக விமர்சனங்களை முன்வைக்கின்ற தமிழர்களை ஆகியோருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சகல வன்முறைகள், அச்சுறுத்தல்கள், நெருக்குவாரங்கள் மற்றும் அடைஞ்சல்கள் என்பவற்றை உடனடியாக நிறுத்திக் கொள்ளல் வேண்டும்

### புலம் பெயர்ந்து வாழும் தமிழ் சமூகத்திற்கு

• புலிகள் இயக்கமானது தொடர்ச்சியாக மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றவரை, இலங்கையில் உள்ள ஸ்தாபனங்களுக்கு நீங்கள் வழங்குகின்ற நிதி உதவிகளாவன, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ புலிகள் இயக்கத்தின் பயன்பாட்டிற்று செல்லாதிருப்பதை, உங்கள் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு உறுதி செய்யுங்கள்.

• இலங்கையில் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பான சூழலை முன்னேற்றுவதில் தமிழ் சமூகத்தின் பாத்திரம் என்னும் விடயம் உட்பட, தமிழ் சமூகத்தினுள்ளே மனித உரிமைகள் தொடர்பான நிலைமையினை முன்னேற்றுவதற்காக இருக்கின்ற வாய்ப்புக்களை கண்டறியுங்கள்.

### பின்னணி நிலவரம் இலங்கையில் நிகழும் யுத்தம்

20 மில்லியன்களை அண்மித்த சனத்தொகையைக் கொண்ட இலங்கையில் பருமட்டாக எடுத்துக் கொண்டால், 74 வீதமானோர் சிங்கள பௌத்தர்களாகவும், 18 வீதமானோர் தமிழர்களாகவும் பெரும்பாலும் இந்துக்கள்), 07 வீதமானோர் முஸ்லீம்களாவும் இக்கின்றனர். தநைகர் கொழும்பில் பெரும் எண்ணிக்கையில் தமிழர்கள் குடியிருந்தாலும், மிகப் பெரும்பான்மையான தமிழகள் நாட்டின் வடக்கு கிழக்கு மாகாணங்களிலேயே செறிந்து வாழ்கின்றனர்.

1983ம் ஆண்டிற்கும் 2002ம் ஆணடிற்கும் இடைப்பட்ட காலத்தில், இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் **(LTTE** அல்லது தமிழ் புலிகள்) இலங்கை அரசாங்கமும மேற்கொண்ட கொடிய யுத்தமானது 60,000 ற்கு மேற்பட்ட உயிர்களை பலிகொண்டுளளதோடு பொரளா தாரததிற்கும் பாரிய நாசத்தை விளைவித்துள்ளது.

இவ் யுத்தத்திற்கு முன் கால் நூற்றாண்டுக்கு, மேலாகவே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான கோரிக்கைகள் இருந்து வந்துள்ளன. 1956ம ஆண்டில் சிங்கள ஆதிக்கத்துடன் பதவிக்கு வந்த (சுதந்திரம் அடைந்து 8வருடங்களின் பின்) அரசாங்கமானது தொடர்ந்து சிங்கள மேலாதிக்கத்தை நிலைநிறுத்த முயற்சித்ததானது, சிறுபான்மை தமிழ் சமூககத்தினரை திட்டமிட்ட ரீதியில் பாகுபாடுடன் நடத்துவதற்கும் வழி வகுத்ததோடு அவர்களை பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சார ரீதியான ஒதுக்கல்களுக்கும் உள்ளாக்கியது. தமிழர்களின் கோரிக் [illegible] பட்ட வனமுறை அற்ற முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்தன.

எனவே 1970 களின் பிற்பகுதியில் தமிழ் அரசியல் கட்சிகளும் பிரிவினைவாத ஆயுதக்குழுக்களும் "தமிழ் ஈழம்" என்றும் சுதந்திரமான தமிழ் தேசம் ஒன்றை உருவாக்குவதற்கான முன்னெடுப்புக்களை ஆரம்பித்தனர். அரசாங்கத்தின் ஆயுதப்படைகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக புலிகள் இயக்கம் உட்பட ஏனைய தமிழ் ஆயுதக்குழுக்களால் வழிநடத்தப்பட்ட தீவிரவாத செயற்பாடுகள் தொடர்ச்சியாக நிகழ ஆரம்பித்தன.

இத்தீவிவாத நடவடிக்கைகள் 1983ம் ஆண்டில் ஒரு யுத்தமாக வெடித்துக் கிளம்பியது. வடக்கே யாழ்ப்பாண குடாநாட்டில், உயர் அதிகாரிகள் உட்பட சிங்கள இராணுவத்தினர் 13 பேரை புலிகள் இயக்கம் கொன்றதன் பின்னர், அதற்கு வன்முறை ரீதியான பதிலடியாக தமிழ் சமூகத்தினரை இலக்கு வைத்து கொழும்பில் கலவரங்கள் உருவாக்கப்பட்டன. இக்கலவரத்தினால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதோடு தமிழர்களுக்கு சொந்தமான வர்த்தக நிலையங்களில் 90 சதவீதமானவை அழிக்கப்பட்டன என்றம கணக்கிடப்பட்டுள்ளது.

தமிழர்கள் வாழ்ந்த பெரும்பாலான குடியிருப்பு பகுதிகள் அழிக்கப்பட்டதோடு 100,000 த்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொழும்பில் இருந்து இடம் பெயர நேர்ந்தது. அரசாங்கத்தின் ஒத்தாசையுடனெயே இக் கலவரங்கள் நிகழ்ந்ததாக பல சாட்சியங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் இக் கலவரமே யுத்தத்திற்கான விசையை அழுத்திவிட்டது என்றும் பல அவதானிகள் அடையாளப்படுத்துகின்றனர்.

இம்மோதல் நிலைமையானது இரு சாரரினாலும் மேற்கொள்ளப்பட்ட ஒட்டு மொத்தமான மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்த சட்டங்களை மீறுதல போன்ற சம்பவங்களினால் நிறைந்துள்ளது. அரசாங்க படைகளானது தமிழ் சிவில் மக்களை கொன்று குவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு சிவில் மக்கள் தமது பாதுகாப்பிற்காக ஓடி ஒதுங்கிய வணக்க ஸ்தலங்கள் மற்றும் மருத்துவ நிலையங்கள் என்பவை உட்பட சிவில் மக்கள் வாழும் பகுதிகளின் மீதும் மிகக் கண்மூடித்தனமாக வகையில் ஆட்டிலறி மற்றும் விமான குண்டு வீச்சுக்களை நிகழ்த்தினர்.

தொடரும்............




# புலிகளிடம் உள்ள சிறுவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் - யுனிசெவ்

புலிகள் தங்களிடம் உள்ள வயது குறைந்த சிறுவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும், சிறுவர் சிறுமியரை யுத்த நடவடிக்கைகளுக்காக சேர்த்துக் கொள்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என யுனிசெவ் புலிகளை கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கையில் நடைபெற்று வரும் யுத்த நடவடிக்கைகளில் சிறுவர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருவதாக குற்றம் சுமத்தியுள்ள யுனிசெவ் அமைப்பு, வயது குறைந்த சிறுவர்களின் இளமைகாலம் சீரழிந்து போவதாகவும் கவலை தெரிவித்துள்ளது.

இது பற்றி யுனிசெவ்வின் இலங்கைக்கான பிரதிநிதி ஜிவான் வான் கிரிப்பன் பி.பி.சி க்கு தெரிவிக்கையில் புலிகள் இயக்கததின் துணைப்படைப் பிரிவைச் சேர்ந்த வயது குறைந்த சிறுவன் ஒருவன் இறந்துள்ளமை மிகவும் துரதிஷ்டவசமான நிகழ்வாகும். இந்தச் சிறுவன் சோதனைச் சாவடியிலுள்ள வீரர்களுக்கு உணவு எடுத்துச் செல்லும் பணியில் ஈடுபட்டிருந்திருந்தவேளை இறந்துள்ளான். இந்தச் சம்பவத்தின் மூலம் புலிகள் இயக்கத்தில் சிறுவர்கள் உள்ளனர் என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் கணக்கீட்டின் படி 1358 சிறுவர்கள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. 2003ம் ஆண்டு தம்மிடமுள்ள வயது குறைந்த சிறுவர்களை அனைவரையும் விடுதலை செய்து விட்டதாக புலிகள் இயக்கம் தெரிவித்துள்ளது.

புலிகள் இயக்கத்தில் எத்தனை சிறுவர்கள் இருக்கிறார்கள் என்ற கேள்விக்கு பதிலளித்த ஜிவான் வான் கிரிப்பன் நேரடியாகவோ மறைமுகமாகவோ புலிகள் இயக்கத்தில் எத்தனை சிறார்கள் இருக்கிறார்கள் என்பது தெரியாவிட்டாலும் காணாமல் போகும் சிறார்களின் பற்றிய முறையான தகவல்கள் தங்களிடம் உள்ளதாகவும், அதன்படி புலிகள் இயக்கத்தில் வயது குறைந்த சிறுவர்கள் 1400 பேர் இருக்கிறார்கள் என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1983 – 2005 இறுதிவரை மட்டு-அம்பாறைப் பகுதிகளில் மறைந்த தோழர்கள் விபரம்:-

★ 24-08-1984 சேனைக்குடியிருப்பில் பிரதேச அரசியல் பிரிவு பொறுப்பாளர் தோழர் பகீரதன் உட்பட ஐந்து தோழர்கள்.

★ 28-03-1985 கல்லாறு நீலாவணையில் தோழர் சிவா உட்பட ஐந்து தோழர்கள்.

★ 14-04-1985 அக்கரைப்பற்றில் தோழர் நாதன் உட்பட ஐந்து தோழர்கள்.

★ 18-10-1985 தாந்தாமலை 40ம் கட்டையில் தோழர் சுதா உட்பட ஐந்து தோழர்கள்.

★ 03-04-1986 கடலில் தோழர் இளங்கோ உட்பட 10 தோழர்கள்.

★ 16-12-1986 திருக்கோயில் கஞ்சிக்குடியாற்றில் தோழர் ரஞ்சித் உட்பட 40 தோழர்கள்.

★ 14-11-1986 கன்னங்குடா காலபோட்டமடுவில் தோழர் காந்தன் உட்பட ஏழு தோழர்கள்.

★ 25-11-1986 ஈரளக்குளத்தில் தோழர் வினோத் உட்பட ஏழு தோழர்கள்.

★ 11-02-1987 மண்டூர் பலாச்சோலையில் தோழர் தயாளான் உட்பட ஐந்து தோழர்கள்.

★ 11-03-1987 மண்டூர் கோட்டைமுனையில் தோழர் அசோக் உட்பட 28 தோழர்கள்.

★ 04-03-1987 மருதமுனையில் மத்தியகுழு உறுப்பினர் தோழர் குமார் உட்பட ஆறு தோழர்கள்.

★ 10-10-1988 கொக்கட்டிச்சோலையில் தோழர் விஜயன் உட்பட நாலு தோழர்கள்.

★ 11-09-1989 முதலைக்குடா மண்முனைதுறையில் தோழர் சந்துரு உட்பட 13 தோழர்கள்.

★ 11-12-1989 கள்ளியங்காடு மட்டக்களப்பு தோழர் தம்பி லோரன்ஸ் உட்பட 175 தோழர்கள்.

★ 05-11-1989 தப்பிலுவில் தோழர் சுதா உட்பட 60 தோழர்கள்.

★ 25-12-1989 வெலிகந்தை பிள்ளையாரடியில் தோழர் சபராஜ், 89 தோழர்கள்.

★ 26-12-1989 திம்புலாகல மலைப்பகுதியில் தோழர் முத்து உட்பட 160 தோழர்கள்.

★ 15-12-1989 ஆயித்தியமலை நான்கரைகட்டையில் தோழர் டொனி உட்பட 15 தோழர்கள்.

★ 15-12-1989 பாவற்கொடிச்சேனை தோழர் ராஜா உட்பட 25 தோழர்கள்.

★ 25-12-1989 நீலாறு என்னும் இடத்தில் தோழர் லக்ஷ்மன் உட்பட, 56 தோழர்கள்.

★ 26-12-1989 தேக்கஞ்சோலையில் தோழர் மேகன் உட்பட 70 தோழர்கள்.

★ 26-12-1989 புலிபாய்ந்தகல்லில் தோழர் ரவி உட்பட 27 தோழர்கள்.

★ 22-12-1989 ஆயித்தியமலையில் தோழர் மாறன் உட்பட 16 தோழர்கள்.

★ 17-11-1989 கல்முனையில் தோழர் சுதா உட்பட 35 தோழ்ாகள்.

★ 17-11-1989 சவளக்கடையில் தோழர் சங்கர் உட்பட 40 தோழர்கள்.

★ 09-01-1990 மத்தியமுகாம் 4ம் கொலனியில் தோழர் கணேஸ் உட்பட ஐந்து தோழர்கள்

★ 19-06-1990 தமிழ்நாட்டில் செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா உட்பட 13 தோழர்கள்.


★ 19-02-1990 காக்காச்சிவட்டை, மண்டூர் தோழர் தாஸ் உட்பட ஏழு தோழர்கள்.

★ 30-10-1995 கல்முனை காரியாலயத்தின் மீதான தாக்குதலில் காளி உட்பட மூன்று தோழர்கள்.

★ 26-12-1997 ஏறாவூர் தளவாய் தோழர் நிதி உட்பட ஏழு தோழர்கள்.

★ 29-05-1999 தாண்டவன்வெளி மோட்டார் சைக்கிள் காராஜில் தோழர் ராசிக் உட்பட ஐந்து தோழர்கள்.

வடக்கு-கிழக்கிலும் குறிப்பாக மட்டு-அம்பாறைப்பகுதியிலும் செயல்பட்ட தமது உயிரை அர்ப்பணித்த தோழர்கள். சகல தோழர்களினதும் பெயர்கள் இதில் இடம்பெறவில்லை. அவை தொடர்ந்து இடம்பெறச் செய்யப்படும்.



மூதூர் முஸ்லிகளின் வாழ்வு முள்பாதையில் – புலிகள் மே 29ல் முஸ்லிகளை 72 மணிநேரத்தில் வெளியேற அச்சுறுத்தியிருந்தனர்.




## ஈடில்லா மனித இழப்புக்களின் துயரம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தி
## வாழ்க்கைச் சித்திரம்
### பி.ஆர். நந்தாவின் நூலில் இருந்து

மோகன் தாஸின் பள்ளிப்பருவம் அப்படி ஒன்றும் பிரமாதமாக இருக்கவில்லை. வகுப்பறையிலோ, விளையாட்டு மைதானத்திலோ அவர் சோபிக்கவில்லை. பேசா மடந்தையாய், கூச்சமும், ஒதுக்க சுபாவமும் கொண்டு பிறர் மத்தியில் பேசாமல் வாயடைத்து நிற்பார். தான் ஒரு சுமாரான மாணவன் என்ற பிறர் மதிப்பீட்டைக் கூட அவர் பொருட்படுத்தவில்லை.

ஆனால் பிறரிடம் தன்னுடைய மதிப்பைக் காப்பாற்றிக்கொள்ள பெரும் அக்கறை கொண்டிருந்தார். தன்னுடைய ஆசிரியர்களிடமோ, சக மாணவர்களிடமோ எப்பாதும் பொய் பேசியதில்லை என்பது பற்றி அவர் பெருமையுற்றார். அவரது நடத்தையைப் பற்றி சிறிது இழிவாகப் பேசப்பட்டாலும், அது அவர் கண்களைக் குளமாக்கி விடும்.



வளரும் எல்லாக் குழந்தைகளையும் போலவே அவரும் ஒரு முரண்டு பிடிக்கும் காலத்தைக் கடந்து வந்திருக்கிறார். ஆனால் அவரது சுய சரிதையில் காட்டப்பட்டதற்கு மாறாக, அவரது சமகாலததினர் பலருடையதை விட காந்தியின் வாலிபப் பருவத்தில் அவ்வளவு, புயல் வீசியதில்லை. புலால் உண்ணுதல், புகை பிடித்தல், சிறு திருட்டுக்கள் போன்ற செய்யத்தகாத சாகசங்களை செயவது அவர் வயதையொத்த பையன்களுக்குப் புதிதல்ல. இதில் விசேஷம் என்னவென்றால், அத்தகைய அவருடைய சாகசங்கள் எப்படி முடிவுக்கு வந்தன என்பதே. தான் தவறிழைக்கும் ஒவ்வொரு முறையும், தனக்குத்தானே ஒரு கேள்வியை எழுப்பிக்கொண்டு அதற்கான விடையை, தான் உண்டாக்கிய நீதிக் கணக்கில் கண்டுபிடிக்க முயற்சிப்பார். "ஒருபோதும் திரும்பவும் பண்ண மாட்டேன்" என்பதே அவர் ஒவ்வொரு தவறையும் செய்தபிறகு, தனக்குத்தானே எடுத்துக்கொள்ளும் வாக்குறுதி. அவர் அந்த வாக்குறுதியைக் காப்பாற்றினார்.

#### இங்கிலாந்து பயணம்

1887ல் பம்பாய் சர்வகலாசாலை நடத்திய மெட்ரிகுலேஷன் பரீட்சையில் மோஹன் தேர்வு பெற்றார். அதற்கு ஒரு வருடததிற்கு முன் நிகழ்ந்திருந்த அவரது தந்தையின் மரணம், குடும்பத்தில் நிதிப்பற்றாக்குறையை ஏற்படுத்தியிருந்தது. குடும்பத்தில் கல்வி பயிலும் ஒரே பையன் என்பதால், குடும்பம் முழுவதும் அவரைத்தான் நம்பியிருந்தது. அண்மையில் கல்லூரியிருந்த பவர் டவுனுக்கு அவர் அனுப்பப்பட்டார்.

மோஹனின் துரதிஷ்டம் அங்கு போதனை ஆங்கிலத்திலிருந்தது. அவர் விரிவுரைகளை புரிந்துகொள்ள முடியாமலும், முன்னேற்றம் காண முடியாமலும் தவித்தார். இதற்கிடையில் மாவ்ஜி தாவே எனும் குடும்ப நண்பர், சட்டக்கல்வி பயில மோஹனை இங்கிலாந்துக்கு அனுப்பி வைக்கும்படி ஆலோசனை கூறினார். அவருடைய மூத்த சகோதரருக்கு கவர்ச்சிகரமான யோசனையாகப் பட்டாலும் அவர்களால் இதற்கு செலவழிக்க முடியுமா என அவர் அஞ்சினார். கேள்விப்பட்டிராத கேளிக்கைகளும், ஆபத்துக்களும் நிரம்பிய அந்நிய நாட்டுக்கு தனது கடைக்குட்டியை அனுப்ப அவருடைய தாயாருக்கு விருப்பம் இல்லை.

காந்தி குடும்பத்தினர் சார்ந்த மோத்பனியா ஜாதி, வெளிநாட்டுப் பயணத்திற்கு எதிரான அதனுடைய தடையை மீறினால், குடும்பம் முழுவதையுமே ஜாதியை விட்டு விலக்கி வைத்துவிடப் போவதாக மிரட்டியது. எனினும், வெளிநாடு செல்ல வேண்டுமென்ற மோஹனின் தீவிரம், இத்தனை தடைகளையும் வெற்றிகரமாக முறியடித்தது. செப்டம்பர் 1888 இல் தனது பதினெட்டாவது வயதில், அவர் இங்கிலாந்துக்கு பயணமானார்.

ராஸ்கோட்டின் கிராமிய சூழலிலிருந்து சென்ற மோஹனுக்கு உலகின் பல்வேறு மனிதர்கள் அடங்கிய ஒரு நீராவிக் கப்பலின் சூழ்நிலை, ஒரு பெரிய மாற்றம்தான். மேற்கத்திய உணவு, உடை, பழக்க வழக்கங்களைக் கடைபிடிப்பத ஒர கடினமான காரியம் தான். கப்பலிலும் சரி, லண்டனில் இருந்த முதல் சில வாரங்களிலும் சரி, தானே ஒரு முட்டாளாகிக் கொள்கிறோமோ என்ற உணர்வு ஏற்படுவதை அவரால் தவிர்க்க முடியவில்லை.

இந்தியாவை விட்டு புறப்படுவதற்கு முன் "மது, மாது, மாமிசத்தைத் தொடுவதில்லை" எனத் தனது தாயாருக்கு வாக்குறுதி கொடுத்திருந்தார். அவர் சைவ உணவைத் தவிர வேறு உணவு உண்ண மாட்டேன் எனனும் சபதம் அவரை எப்போதம் சங்கடத்தில் மாட்டிவிடும் விஷயமாகிவிட்டது. அவருடைய உணவு பற்றிய விருப்பு, வெறுப்புகள் அவருடைய உடல்நிலையைக குலைத்து சமூகத்திற்கு ஒவ்வாதவர் ஆக்கிவிடுமோ, என அவருடைய நண்பர்கள் அஞ்சினர். அவரை குறை சொல்வோரை நிராயுதபாணியாக்கவும், சைவ உணவு பழக்கம் இருக்கட்டும், புது சூழ்நிலைக்கு இசைந்து போக முடியாதவன் அல்ல என்று நிரூபிக்கவும் அவர் "ஆங்கிலேய கலாச்சாரம்" எனும் தடிமனான வெளிப்பூச்சை பூசிக கொள்ளத் தீர்மானித்தார்.

ஒரு "ஆங்கிலேய" பெரிய மனிதனாக மாற மனதில் உறுதி பூண்டபின் காலத்தையோ, பணத்தையோ பொருட்படுத்தத் வில்லை. எவ்வளவு செலவழித்தாலும் சரி, அவருடைய வெளி வேடம் மற்றவர்களைக் காட்டிலும் மிகச் சிறந்ததாக இருக்க வேண்டும். லண்டனில் நாகாகத்துக்கு பெயர்போன தையற்காரர்களிடம் புது "சூட்டுக்கள்" தைத்துக் கொடுக்கப்பட்டது, இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட ஒரு இரட்டை வட தங்கச் "செயின்", கடிகாரத்தை அலங்கரித்தது வல்லுனர்களைக் கொண்டு, சொற்பொழிவு, நடனம், பாட்டு ஆகிய கலைகளில் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது.

எனினும் இந்தப் பரிசோதனையில் காந்தி முழு துறவு நிலை மனப்பான்மையுடன் தம்மை உட்படுத்திக் கொள்ள முடியவில்லை. தனது செயல்களை திரும்ப அசைபோடும் குணம் அவரை விட்டபாடில்லை. ஆங்கில நடனமும், பாட்டும், அவருக்கு எளிதில் வரவில்லை. தையற் கடைகளும், நடன அரங்குகளும் அவரை ஆங்கிலேய நன்மகனாக மாற்றிய போதும், அவரை பட்டணத்திலுள்ள ஒரு ஆங்கிலேய நன்மகனாக மட்டுமே மாற்றியதை அவர் உணர ஆரம்பித்தார். குறுகிய மூன்றுமாத அலைச்சலுக்குப் பின் தொட்டாற் சுருங்கி தனது கூட்டிற்கு திரும்பியது. ஆடம்பர செலவிலிருந்து விலகி தீவிரமான சிக்கனம் திரும்ப ஆரம்பித்தது. தான் செலவழிக்கும் ஒவ்வொரு .'பார்திங்கையும்



அவர் கணக்கு வைத்துக்கொள்ளலானார். தன்னுடைய அறைகளை மாற்றினார். காலைச் சிற்றுண்டியைத் தாமே தயார் செய்து கொண்டார். பேருந்துக்காகும் கட்டணத்தை சேமிப்பதற்காக தினமும் எட்டு முதல் பத்து மைல் தூரம் வரை நடந்தார்.


ஒரு மாத செலவை இரண்டு பவுண்டாக அவரால் குறைக்க முடிந்தது. தனது குடும்பத் தேவைகளை வெகுவாக உணர்ந்ததோடு, தனது சகோதரரிடம் பண உதவி கேட்பது குறைந்து போனது பற்றி அவர் சந்தோஷப்பட்டார். அவரது உட்புற, வெளிப்புற வாழ்க்கையில் எளிமை இழையோடியது. முதல் மூன்று மாதங்கள் கடைபிடித்த ஆடம்பரம், அவரை ஆங்கில சமுதாயத்தோடு ஒட்டாதவர் என பேசியோருக்கு எதிராக அவர் உபயோகித்த பாதுகாப்பு கவசமேயாகும்.

இது காணும் அவரைச் சங்கடத்துக்குள்ளாக்கிய சைவ உணவுப் பழக்கம் சீக்கிரமே ஒரு வரபிரசாதமாக மாறியது. ஹென்ரி எஸ். சால்ட் எழுதிய "சைவ உணவு முறைக்கு வக்காலத்து" **(Plea for Vegetarianism)** எனும் புத்தகத்தை அவர் படிக்க நேர்ந்தது. அதிலிருந்த வாதங்கள் அவர் மனதில் பதிந்தன. இதுவரை, மாமிசமில்லாத உணவு அவரது உணர்வுபூர்வமான விஷயமாக இருந்தது. அப்போதிலிருந்து அது ஒரு காரணமற்ற திடமான கருத்தாயிற்று. இனிமேல் சைவ உணவு முறை அவர் பெற்றோரைத் திருப்தி செய்வதற்கான ஒன்றாக இருக்கவில்லை. அது ஒரு குறிக்கோளாக உடலையும், மனதையும் கட்டுப்படுத்தும் துவக்கப் பள்ளியாக ஆகியது. ஒரு புது மாற்றமடைந்தவரின் உத்வேகத்துடன் உணவியல் பற்றிய புத்தகங்களைக் கரைத்துக் குடித்தார். சமைப்பதில் ஆர்வம் கொண்டார். மசாலாக்களுக்கான ருசியை நன்கு புரிந்து கொண்டார். ருசி என்பது நாக்கிலில்லை. மனதிலிருக்கிறது என்ற அறிவுபூர்வமான முடிவுக்கு வந்தார். சுவை ஆசையை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. பல வருடங்களுக்குப் பின், சமூகப் பணியில் உயர் இடத்தை அடைவதற்கான பல படிகளில் முதல் படியாக அமைந்தது. மரக்கறி உணவு, அதன் உடன் விளைவாக, இளம் காந்திக்கு புதுப்பொலிவு கொடுத்ததோடு, அவரது கூச்ச சுபாவத்தையும் போக்கியது. "வெஜிட்டேரியன்" என்னும் பத்திரிகைக்கு ஒன்பது கட்டுரைகள் எழுதியதன் மூலம் அவர் எழுத்துப் பணியில் முதல் அடியெடுத்து வைத்தார்.

இந்தக் கட்டுரைகள், இடையிடையே பளிச்சிடும் நகைச்சுவையுடன், இந்திய மக்களின் உணவுப் பழக்கங்கள், அவர்களுடைய சமூக அமைப்பு, திருவிழாக்கள் ஆகியவற்றை விரிவாக விவரித்தன. பவநகர் கல்லூரியில் அவர் ஆங்கில விரிவுரைகளைப் புரிந்துகொள்ள முடியாமலிருந்தார் என்பதை நாம் நினைவில் கொண்டால் இத்தகைய கட்டுரைகளை பிரசுரத்திற்கென அவர் அனுப்பியதே கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய சாதனைதான் லண்டன் சைவ உணவு அருந்துவோர் சங்கத்தின் செயற்குழுவில் அவர் ஒரு உறுப்பினரானார். தான் சிறிது காலம் இருந்த பேய்ஸ்வாடர் **(Bayswater)** எனுமிடத்தில் ஒரு சைவ உணவு அருந்துவோர் சங்கத்தை தோற்றுவித்தார். அவருக்கு சர் எட்வின் ஆர்னால்ட் **(Sir Edwin Arnold)** எனும் ஒரு புகழ் வாய்ந்த சைவ உணவுக்காரர் ஒருவரோடாவது தொடர்பு கொள்ள முடிந்தது.

காந்தியை நெகிழவைத்த "ஆசிய ஜோதி" **(Light of Asia)**, "சுவர்க்க கீதம்" **(The song celestial)** ஆகிய இரு புத்தகங்களை எழுதியவர் அவர். புத்தரின் வாழ்வும், கீதையின் போதனைகளும் அவர் மனதை கிளறின. லண்டனிலுள்ள உணவகங்களிலும் உணவும் தங்க வசதியும் கொண்ட வாடகை விடுதிகளிலும் அவர், உணவுப் பிரியர்களை மட்டுமல்லாது, தீவிர மதப்பற்று உடையவர்களையும் சந்திக்க நேர்ந்தது. அத்தகைய சந்திப்பு ஒன்றில்தான் அவர் 'பைபிள்' பற்றி அறிய நேரிட்டது.

"புதிய ஏற்பாடுகள்" **(the New Testment),** அதிலும் குறிப்பாக, 'குன்றிலாற்றிய விளக்கப்ப பேருரை **(Sermon on the Mount)** நேரடியாக அவர் உள்ளததில் சென்று உறைந்தது. "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம். ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு. உன்னோடு வழக்காடி, உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் கொடுத்துவிடு." எனும் வேதவாக்கு, அவர் குழந்தைப் பருவத்தில் விரும்பிப் பாடிக்கொண்டிருந்த ஷாம்லால் பட் **(Shamlal Bhatt)** எனும் குஜராத்தி கவியின் வரிகளை அவருக்கு நினைவுபடுததின.



குவளை நீ கொடுத்தால்
படைத்திடுவாய்
அறுசுவை உண்டி
கனிவான வாழ்த்துக்களை
ஏற்றிடுவாய்
அடிபணிந்து மண்டி
தம்பிடி தந்தால் தந்திடுவாய்
தங்கம் திருப்பி,
உன்னுயிர் காத்தால் தன்னுயிர்
தந்திடுவாய் விரும்பி,
பேணுதற்குரிய பெரியோரின்
பொன்மொழிகளாம் இவை:
சேவை சிறுதுளி பலனோ
பெருவெள்ளம்
அனைவரும் ஒன்றே
அறிவார் அறிஞர்
இன்னா செய்தமைக்கும்
நன்மையே
செய்திடுவாய் மகிழ்வோடு".

தொடரும்.........

# தோழர் மோகனின் குடும்பத்திற்கும் உற்ற சுற்றத்திற்கும் வங்கக் கடலில் நிகழ்ந்த துயரம்

தோழர் ஜெயமோகன் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் அங்கத்துவம் வகித்தவர். 2003 பிற்பகுதியில் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டார். இன்றுவரை அவரின் கதி என்னவென்று தெரியாது. அவருடைய மனைவி யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

தற்போது 2006 மே 19 இல் மோகனின் குடும்பம் அகதிகளாக புலம் பெயர்ந்து இந்தியாவுக்கு சென்று கொண்டிருக்கையில் படகு மூழ்கி மரணங்கள் சம்பவித்திருக்கின்றன. மோகனின் மனைவி புவனவதி (40), மகள் ரதீஷா (14), மோகனின் தந்தையார் கோவிந்தசாமி, அவரின் சகோதரி நவமணிஅம்மாள் ஆகியோர் இத் துயர சம்பவத்தில் மரணித்தார்கள். மோகனின் மகனான ஒன்பது வயுது நிரம்பிய [illegible] மோகனுக்கு [illegible] நேர்ந்த [illegible]. மோகன் குடும்பத்தினரின் உறவினரான கந்தசாமி என்பவர் தனது மூன்று வயது வந்த பெண் பிள்ளைகளை இழந்துள்ளார்.

மோகனின் புதல்வர்களான ஜனகன் ஜெயமோகன், அரவிந்தன் (11) ஆகியோரையும் மோகனின் சகோதரரின் புதல்வரான அன்பழகன், கந்தசாமியின் புதல்வர்களான பாலமுரளி (21), மனோஜ்(18), டிலக்ஷன்(15) ஆகியோர் இந்திய கடற்படையினரால் காப்பாற்றப்பட்டனர். மோகனின் தந்தை தனது உறவுகளை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டு இயலாத நிலையில் அவரும் மரணித்தார்.

மோகனின் சகோதரர் சஞ்சீவி புழல் அகதி முகாமில் 1990 இல் இருந்து வசிக்கிறார். இவர்களுடன் பெற்றோரை இழந்த இரு புதல்வர்களும் தற்போது வாழ்கிறார்கள்.

இது இன்னும் பலருடையதைப் போலவே மிகவும் துயரமான சம்பவம். 1980களின் முற்பகுதியில் தமிழ் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் இணைந்து கொண்டவர்கள் திருமலை 10ம் குறிச்சியைச் சேர்ந்தவர்கள். மட்டக்களப்பு சிறை உடைப்பில் சிறையிலிருந்து தப்பிவந்த தமிழ் அரசியல் கைதிகளை பாதுகாத்து அனுப்பி வைத்தவர்கள் சஞ்சீவியும் அவரின் உறவினர்களும். திருமலையில் வன்முறை என்றால் இந்த கடலோர கிராமங்களில் வன்முறையின் நிழல் படியும். இங்கும் அங்குமாக அலையும் வாழ்க்கை இவர்களுக்கு. கடந்த இரண்டு தசாப்தங்களாக உயிரழிவுகளையும், பொருளாதார இழப்புக்களையும் இவர்கள் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

துயரம் தொடர்கிறது இன்னும் விடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ.பி.ஆர்.எல்.எவ் - பத்மநாபா

## கட்சியின் அடிப்படை நிலைப்பாடுகள்

வெளியீடு:- 30 இன்- தொடர்ச்சி

11. புலிகளின் ஏகோபித்த பாசிசக் கரங்களுக்குள் தமிழ்ச் சமூகம் அகப்பட்டிருக்கின்றமை, வடக்கு கிழக்கில் வாழும் சனத்தொகையில் எற்பட்டிருக்கும் மாற்றம், சர்வதேச சக்திகள் யுத்த நிறுத்தம், சமாதானத்துக்கான பேச்சுவார்த்தை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமூக சேவை, புனர்வாழ்வு, புனர்நிமாணம் என்ற போர்வைகளில் இலங்கையின் அரசியல் பொருளாதாரத் தளங்களுக்கள் ஆழமாகக் காலூன்றி வருகின்றமை, தென்னிலங்கையின் அரசியலில் அதிகாரப் பகிர்வு தொடர்பாகவும் மற்றும் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவினால் உருவாக்கப்பட்ட எதேச்சாதிகார அரசியல் யாப்பை மாற்றியமைக்க வேண்டும் என்ற எண்ணமும் மற்றும் சிங்கள மத்தியில் சமாதானம் மற்றும் அரசியல் தீர்வு தொடர்பாக ஏற்பட்டுள்ள அக்கறைகள் போன்ற பல்வேறு விடயங்களை கவனத்தில் கொண்டும் சாதகமான மாற்றங்களைக் கருத்திற் கொண்டும் நாமும் எம்மில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வோமாக. நாம் இலங்கையர்கள்: நமது நாடு இலங்கை. சிங்களமும் தமிழும் இலங்கையின் பாரம்பரிய மொழிகள், இரண்டு மொழிகளும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் சம உரிமையுடையவை: இலங்கையிலுள்ள பௌத்தம், இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம் ஆகிய நான்கு மதங்களும் சமமாக மதிக்கப்பட வேண்டியவை: இலங்கையில் சிங்களவர்கள், தமிழர்கள், இஸ்லாமியர்கள், மலையகத் தமிழர்கள் என தேசிய இனத்தவர்கள் உள்ளனர். இங்கு சிறுபான்மையாக உள்ள தேசிய இனத்தவர்களிற்கு அவரவர்கள் பெரும்பான்மையாக வாழும் பிராந்தியங்களை வரையறுத்து அங்கு மாநில சுயாட்சி அமைப்புகளை உருவாக்கி இலங்கையை ஒரு கூட்டாட்சி அரசிலமைப்பைக் கொண்ட ஒரு நாடாக அமைத்திடல் வேண்டும். இலங்கையின் அரச நிர்வாக, இராணுவ மற்றும் பொலிஸ் அமைப்புக்கள் அனைத்திலும் சிறுபான்மைத் தேசிய இனங்களின் சனத்தொகைக்குக குறையாது பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஏற்பாடுகள் அமைய வேண்டும். அனைத்து மக்களினதும் அடிப்படை உரிமைகளும், மனித உரிமைகளும் சட்டங்களாலும் நடைமுறைகளாலும் உறுதியாதல் வேண்டும். இவ்வாறான உணர்வுகளும் இதற்கான இயக்கங்களும் அவசியமர்கும். சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராகவும் குறுகிய நோக்கங்கள் கொண்ட பிரிவினை வாதத்துக்கெதிராகவும் இந்த இயக்கம் தயக்கமின்றியும் மயக்கமின்றியும் போராடல் வெண்டும்.

12. மரபுரீதியான எமது வழிமுறைகளில் நாம் பாரிய மாற்றங்களைக் கொள்கைரீதியாகவும் நடைமுறையிலும் நாம் நிலை நிறுத்தவேண்டியுள்ளது. சமூக காட்டுமிராண்டித்தனத்திற்கு பதிலாக நாங்கள் மனிதாபிமானத்தையும் அகிம்சையையும் வலியுறுத்த வேண்டியிருக்கிறது. தமிழ் சமூகத்தில் ஜனநாயகம் சமாதானம் ஆகியவற்றின் மீது விழிப்புணர்ச்சியும் சமூகரீதியில் அக்கறை கொண்ட ஈடுபாடும் ஏற்படும் வகையாக அவற்றை ஒரு சமூக கலாச்சாரமாக வளர்த்தெடுத்தல் வேண்டும். அகிம்சை என்பது ஓர் உயர்ந்த வாழ்க்கை முறை. வன்முறையற்ற போராட்டம் என்பது ஜனநாயகம் மனிதாபிமானம் அகிம்சை ஆகிய இலட்சியங்களை உயர்த்திப்பிடித்தபடி ஆட்சியாளர்களை பரந்து பட்ட மக்களின் அபிலாஷைகளை நோக்கி நகர்த்துவதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு அரசியல் வழிமுறை. தமிழர் கூட்டணியினரைப் போல ஒருபுறம் வன்முறைகளுக்குத் துணையாகவும் ஆதரவாகவும் இருந்து கொண்டு நாங்கள் அகிம்சை வழிமுறையையே கடைப்பிடிக்கிறோம் என்பது சரியாதல்ல. அதில் நிறைய போலித்தனமும் சுயநலமும் மற்றும் ஆபத்தான அம்சங்களும் அடங்கியுள்ளன. மகாத்மா காந்தியைப் போல் அரசியலில் வன்முறையின்மையை போதித்தல் கடைப்பிடித்தல் என்பதோடு அரசியலில் வன்முறைகளை யார் கடைப்பிடித்தாலும் அதை கண்டித்தல் அதற்கெதிராக வன்முறையற்ற மக்களின் மனச்சாட்சியைத் தூண்டும் போராட்டங்களை நடத்துதல் என நாம் எமது அரசியல் சமூக வாழ்வில் வன்முறையின்மையை எமது இரத்தத்தோடு கலந்த ஒன்றாக மாற்றுதல் வேண்டும்.

வன்முறையற்ற போராட்டத்தின் தியாகங்கள் வன்முறை மூலமான போராட்டத்தின் தியாகங்களுக்கு எந்தவகையிலும் குறைந்தல்ல. அதே வேளை வன்முறை வழிப் போராட்டங்கள் மேலும வன்முறைகளுக்கும் பழிவாங்கல்களுக்குமே வழிவகுக்கின்றன. ஆனால் வன்முறையற்ற போராட்டங்கள் எதிர்ப்பக்கத்தில் ஆயுதங்களைத் தாங்கி நிற்போரின் மனச்சாட்சிகளைத் தூண்டிவிடும். அதைப்பார்த்துக்கொண்டிருப்போரின் நியாய உள்ளங்களைத் தூண்டிவிடும். வன்முறை ஒரு சமூகத்தை எல்லா வழிகளிலும் சீரழிக்கிறது. ஆனால் வன்முறையற்ற போராட்டம் ஒரு சமூகத்தை மேலும் இறுக்கமாக இணைக்கின்றது. வன்முறையற்ற போராட்டங்கள் பெரும்பாலும் பொதுமக்களைப் பார்வையாளர்களாக்கி அந்நியப்படுத்தி வைக்கின்றது ஆனால் வன்முறையற்ற போராட்டமோ மேலும் மேலும் மக்களை இணைப்பதில்த்தான் அக்கறைகாட்டும் அதன் வெற்றியே பரந்தபட்ட மக்கள் மற்றும் புத்திஜீவிகளை இணைப்பதில்த்தான் தங்கியிருக்கிறது. வன்முறையற்ற போராட்டங்களே சமூக அரசியல்ரீதியான மக்கள் தலைவர்களை வளர்க்கின்றன. மக்களுக்கு அவர்களின் உண்மையான ஆற்றலும் ஆளுமையும் மிக்க தலைவர்களை அடையாளம் காட்டுகின்றன. வன்முறையற்ற போராட்டத்தில் தலைவர்கள் மக்களை மதிக்க வேண்டும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அகிம்சை வன்முறையற்ற போராட்ட முறை என்பன பற்றி பல திரிபுபடுத்தப்பட்ட குதர்க்கங்களுக்கு உள்ளாக்கப்பட்ட வாதப்பிரதிவாதங்களெல்லாம் உண்டு. பாசிசத்துக்கு எதிரான போரின்போது காந்தி இந்தியாவின் ஆதரவை வழங்கியமை ஒரு நாட்டின் எல்லைகளையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதில் சட்டபூர்வமான இராணுவத்தின் அவசியம். சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதில் ஆயுதம் தாங்கிய பொலிஸ் படையின் அவசியம். தன்னை தாக்கியழிக்க வரும் ஒரு மிருகத்துக்கெதிராக ஆயுதம் தாங்கிப் போராடுவதற்கு மனிதனுக்கு உள்ள உரிமை போன்ற பலவிடயங்கள் வன்முறையற்ற போராட்டங்கள் என்ற கருத்துக்கு எதிரான குதர்க்க வாதங்களுக்காக அவரவரது வசதிக்கு ஏற்றவாறு பயன்படுத்தப்படுகின்றன. எனவே நாம் அவை பற்றிய தெளிவான ஆழமான அறிவையும் பயிற்சியையும் பெற்றுக் கொள்ள அக்கறையுடன் ஈடுபாடு காட்டுதல் வேண்டும். அதனை மற்றவர்களோடும் பகிர்ந்து கொள்ளல் வேண்டும். இத்தனை காலம் கடந்தா நாம் இதனைச் சிந்திக்கிறோம் என கேள்வி வரினும் இது எமது அனுபவத்தின் விளைவாக எமக்குள் ஏற்படும் ஒரு பரிணாமமாகட்டும். இதில் நாம் பொய்யர்களாக போலித்தனமானவர்களாக இல்லாமலிருப்பதே பிரதானம்.

# தோழர்களும் நினைவுகளும்

## தோழர் ஐயா

### வேதநாயகம் பத்தின்பநாயகம்



இவர் 1970 களின் முற்பகுதியில் தனது சமூக அரசியல் பணிகளை ஆரம்பித்தவர். புலம் பெயர்ந்துவந்த மலையக மக்களை வன்னிப் பகுதியில் குடியமர்துவதில் பங்களித்தவர். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்தியகுழு உறுப்பினர். 1980 களின் நடுப்பகுதியில் அராஜகத்தின் நீட்சியில் கொல்லப்பட்டார்.

## தோழர் றேகன்



இவர் வவுனியாவை பிறப்பிடமாகக் கொண்டவர். பாலஸ்தீன விடுதலை இயக்கத்திடம் பயிற்சி பெற்றவர். வவுனியா பகுதியில் மக்களை அணிதிரட்டும் பணிகளில் ஈடுபட்டிருந்தவர். 1980 களின் நடுப்பகுதியில் புலிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

## தோழர் ஜோர்ஜ்



ஐரோப்பாவில் குறிப்பாக ஜேர்மனியில் தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்தவர். லத்தீன் அமெரிக்க நாடுகளின் போராட்ட அனுபவங்களை நேரடியாகப் பெற்றவர். நிக்கரகுவா, கியூபாவிற்கு சென்று வந்தவர். திருமலையில் வடக்கு-கிழக்கு மாகாண அரச தலைமையகம் அமைவதற்கான கட்டமைப்பு வசதிகளை ஏற்படு த்துவதில் பங்களித்தவர். தமிழ் அராஜகத்தால் படுகொலை செய்யப்பட்டார்.

## தோழர் குமார்



அம்பாறை தம்பிலுவில் கிராமத்தைச் சேர்ந்த தோழர் குமார் ஈழ மாணவர் பொது மன்றத்தினூடாக தனது சமூக செயற்பாடுகளை ஆரம்பித்தவர். ஈ.பி.ஆர். எல்.எப் இன் மதிய குழு அங்கத்தவர். மட்டக்களப்பு அம்பாறை பிரதேசங்களில் மக்களை அணிதிரட்டல், விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர். தோழர்களுக்கு கலந்துரையாடல் மற்றும் அரசியல் வகுப்புக்களை நடாத்தியவர். பேரினவாத அரச வன்முறையில் அவர் 1980களின நடுப்பகுதியில் கொல்லப்பட்டார்.


## தோழர் சிவா



இவர் பெரிய கல்லாற்றை பிறப்பிடமாகக் கொண்டவர்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களின் நீள அகலங்களில் அலைந்து திரிந்து வேலை செய்தவர். 1980 களின் நடுப்பகுதியில் பேரினவாத அடக்குமுறையாளர்களால் கொல்லப்பட்டார்.

## தோழர் ரஞ்சித்



மட்டக்களப்பு பட்டிருப்பை பிறப்பிடமாக கொண்ட தோழர் ரஞ்சித் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திடம் பயிற்சி பெற்றவர். குருமன்வெளி களுவாஞ்சிக்குடி பகுதிகளில் அரசியல் வேலைகளில் ஈடுபட்டவர்.

## தோழர் கபூர்



கொழும்பில் 1977 இல் தமிழர்கள் இன வன்முறையினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த போது தன்னை சமூக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுத்திக் கொண்டவர். 1983 இற்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் வேலை செய்தவர். 1980 களின் நடுப்பகுதியில் புலிகளால் இயக்கம் தடை செய்யப்பட்ட போது கடத்தப்பட்டார். இயக்கத்தின படையமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒரு வராகவும் கடமையாற்றியவர். எளிமையும் அர்ப்பணமும் நிறைந்த தோழர்.

## தோழர் சின்னவம்




திருமலை தம்பலகாமத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முன்னோடிகளில் ஒருவர். பாலஸ்தீன இயக்கத்திடம் பயிற்சி பெற்றவர். பாசறைகளில் தோழர்களின் மனங் கவர்ந்த தோழர். காரைநகர் தாக்குதல் சம்பவத்தில் பலி கொள்ளப்பட்டார்.

## தோழர் கிருபா



அம்பாறை காரைதீவை பிறப்பிடமாகக் கொண்டவர் 1980 களின் முற்பகுதியில் இருந்தே ஈழ மாணவர் பொதுமன்றத்தினூடாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் பிரவேசித்தவர். வடகது கிழக்கு மாகாண சபையில் நிதியமைச்சராக இருந்தவர். தோழர் பத்மநாபாவுடன் பன்னிரு தோழர்கள் படுகொலை செய்யப்பட்டபோது தோழர் கிருபாவும் படுகொலை செய்யப்பட்டார்.

## தோழர் V.A. கந்தசாமி



இலங்கையின் இடது சாரி இயக்கத்திலும் யாழ குடா நாட்டின தீண்டாமை ஒழிப்பு இயக்கங்களிலும் மிக நீண்டகாலம் பணியாற்றியவர். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் பிற்கால கட்டத்தில் இணைந்து கொண்ட இவர் 1992 இல் மாரடைப்பால் உயிர் நீத்தார்.

## தோழர் அன்பரசன்



மலையகம் பொகவந்தலாவ பிறப்பிடமாகக் கொண்டவர். 80 களின் முற்பகுதியில் ஈழமக்கள புரட்சிகர புரட்சிகர விடுதலை முன்னணியில் இணைந்து கொண்ட தோழர் அன்பரசன் தமிழகத்திலும் மலையகத்திலும் வடக்கிலும் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்திலும் மலையக மக்கள் மத்தியில விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் பங்களித்திருந்தார். 80களின் நடுப்பகுதியில் அராஜகத்துக்கு தமிழ் அராஜகத்துக்கு பலியானார். மாற்று இயக்கங்களை புலிகள் தடைசெய்தபோது.

## தோழர் பெஞ்சமின்



மலையகத்தில் இருந்து தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராகவும் மலையக மக்களின் அடிமை வாழ்வுக்கு எதிராகவும் போராட புறப்பட்ட தோழர் பெஞ்சமின் அறிவும் ஆற்றலும் தீர்க்கதரிசனமும் நிறைந்த ஒரு இளைஞன். தமிழகத்திலும் யாழ்ப்பாணத்திலும் அவர் சமூகத்தில் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டிருந்தார். அவர் தோழர்கள் சமூகத்தில் யுத்த காலத்தில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிப்பது மிகுந்த ஈடுபாட்டுடன் ஈடுபட்டார். 1986 இன் இறுதிப் பகுதியில் இவரும் அராஜகத்தினால் வீழ்த்தப்பட்டார்.

தி. சிறிதரன் 141ஏ, மன்னார் வீதி, குருமன்காடு, வவுனியா. அவர்களால் இரத்தினப்பிட்டிய C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org